


# தினபூமி

thinaboomi.com




கோவை, திங்கள், டிசம்பர் 04, 2023 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 08 ₹ 3.00



**பிலிப்பைன்சில் கிறிஸ்தவ பிரார்த்தனை கூட்டத்தில் குண்டுவெடிப்பு: 3 பேர் பலி**


...2-ம் பக்கம்

**இன்று முதல் 3 நாட்கள் இந்தியாவில் கென்யா அதிபர் ரூடோ சுற்றுப்பயணம்**

...3-ம் பக்கம்

**அடுத்த உலகக்கோப்பையில் விளையாடுவது குறித்து மெஸ்ஸி கருத்து**

...7-ம் பக்கம்





● சென்னை சேப்பாக்கத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று, கனமழை மற்றும் மிக்ஜாம் புயலை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் உடனிருந்தனர்.

# பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் பாராளுமன்றம் இன்று கூடுகிறது

## 4 மாநில தேர்தல் முடிவுகள் எதிரொலிக்கும்

புதுடெல்லி, டிச. 04-

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் பாராளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் இன்று கூடுகிறது. இந்த கூட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற 4 மாநில தேர்தல் முடிவுகள் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்த கூட்டத் தொடரில் 21 மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று (திங்கட்கிழமை) தொடங்குகிறது. இந்த கூட்டத்தொடர் வருகிற 22-ம் தேதி வரை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

முன்னதாக இந்த கூட்டத்தொடரை சுமூகமாக நடத்த டெல்லியில் நேற்று முன்தினம் மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடந்தது. அதில் 23 கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.

மொத்தம் 19 நாட்கள் நடைபெற உள்ள இந்த கூட்டத்தொடரில் 15 நாட்கள் அலுவல் நாட்களாக இருக்கும். இந்த 15 நாட்களில் மொத்தம் 21 மசோதாக்களை நிறைவேற்ற மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்த கூட்டத்தொடர் தான் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசின் 17-வது பாராளுமன்றத்தின் நிறைவு கூட்டத்தொடர் ஆகும். எனவே இந்த கூட்டத் தொடரில் பல்வேறு முக்கிய அறிவிப்புகளை வெளியிட மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது.

4 மாநில தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகி இருக்கிறது. இது இன்று தொடங்கும் பாராளுமன்ற கூட்டத்தொடரில் எதிரொலிக்கும். இதன் காரணமாக பாரதிய ஜனதா, காங்கிரஸ் இடையே பாராளுமன்றத்தில் அனல் பறக்கும் வகையில் விவாதங்கள் நடைபெறும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

அது போல காஷ்மீர் சீரமைப்பு சட்டமசோதா, பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா, தபால் துறை சட்ட மசோதா போன்றவற்றிலும் ஆளுங்கட்சிகளுக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் இடையே கடும் மோதல் ஏற்படும் என்று தகவல்கள் வெளியாகி இருக்கின்றது. எனவே இந்த கூட்டத்தொடர் அனல் பறக்கும் வகையில் இருக்கும்.

பாராளுமன்றத்தில் இன்று திரிணாமுல் காங்கிரஸ் பெண் எம்.பி. மெகுபா மோய்த்ராவுக்கு எதிராக அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று தெரிகிறது. எம்.பி.க்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை குழு அளித்துள்ள அந்த அறிக்கை மிகப்பெரிய பரபரப்பை ஏற்படுத்தும் என்று தெரிகிறது.

பாராளுமன்றத்தில் கேள்வி கேட்க தொழில் அதிபர்களிடம் லஞ்சம் பெற்றதாக திரிணாமுல் காங்கிரஸ் பெண் எம்.பி. மீது குற்றம் சுமத்தப்பட்டு உள்ளது. அவரது பதவி பறிக்கப்படலாம் என்று கடந்த சில நாட்களாக தகவல்கள் வெளியானது. இதன் காரணமாக இன்றைய கூட்டத்தில் அவர் மீது தாக்கல் செய்யப்படும் அறிக்கை மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. அந்த பெண் எம்.பி. பதவி பறிக்கப்பட்டால் பாராளுமன்ற கூட்டத்தொடரில் மேலும் அனல் பறக்கும் சூழ்நிலை உருவாகும்

# மிக்ஜாம் புயல் முன்னெச்சரிக்கைகள் மூலம் பாதுகாப்பான சூழலை உருவாக்கியுள்ளோம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி

சென்னை,டிச. 04-

மிக்ஜாம் புயல் நடவடிக்கையாக தொடர் முன்னெச்சரிக்கைகள் மூலம் பாதுகாப்பான சூழலை உருவாக்கியுள்ளோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

வங்கக்கடலில் நிலைக் கொண்டுள்ள புயலுக்கு மிக்ஜாம் என பெயரிடப்பட்டுள்ளது. இந்த புயலானது வட தமிழகம் மற்றும் தெற்கு ஆந்திரா பகுதியை நோக்கி வடமேற்கு திசையில் நகர்ந்து, பின் நெல்லூர்- மசூலிப்பட்டினம் இடையே நாளை 5-ம் தேதி மாலை கரையைக் கடக்க உள்ளது.

இந்நிலையில் சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது,

அவசரகால கட்டுப்பாட்டு மையம் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. 2.44 கோடி மக்களுக்கு புயல் முன்னெச்சரிக்கை குறித்து குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது. தொடர் முன்னெச்சரிக்கைகள் மூலம் பாதுகாப்பான சூழலை உருவாக்கியுள்ளோம்.

மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்கு 225 வீரர்கள் கொண்ட 9 குழுக்கள் தயார் நிலையில் உள்ளன. 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில் மட்டும் ஆயிரம் மோட்டார் பம்புகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் சீரமைப்பு பணிகளை அதிகாரிகள் முழு அர்ப்பணிப்போடு மேற்கொள்ள வேண்டும். புயலின் போது மரங்கள் மின்கம்பங்கள் கீழே விழும் அபாயம் உள்ளதால், மக்கள் வெளியே வராமல் இருக்க அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மிக்ஜாம் புயல்: மின்தடை ஏற்படாத வகையில் பணிபுரிய மின்துறை தயார்

## அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல்

திருவள்ளூர், டிச. 04-

எல்லாவிதத்திலும், மின்தடை ஏற்படாத வகையிலும், அப்படி ஏதேனும் புயல் காற்றின் வேகத்தின் காரணமாக மின் தடை ஏற்பட்டாலும், உடனடியாக அந்த இடத்திலே பணிபுரிய மின் வாரியத்தின் ஊழியர்கள் எல்லா நிலையிலும் தயாராக இருக்கிறார்கள் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், துரைநல்லூர் 110 கி.வோ. துணை மின் நிலையத்தில் வங்க கடலில் உருவாகியுள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று ஆய்வு செய்தார்.

அப்போது மழை, வெள்ள காலங்களில் மின் கசிவினால் ஏற்படும் விபத்துக்களை தடுத்திட தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள தலைமை பொறியாளர் மற்றும் மேற்பார்வை பொறியாளர்களை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

பின்னர், அங்கு தயார் நிலையில் இருந்த களப் பணியாளர்களிடம் மின் சீரமைப்பு பணிகளில் ஈடுபடும் போது மிகுந்த கவனத்துடனும், உரிய பாதுகாப்புடனும், பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தி பணியில் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பின்னர், செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியதாவது:

இந்த புயலால் எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த புயலின் காரணமாக மிக அதிகமான கன மழை பெய்யக் கூடிய வாய்ப்புள்ள மாவட்டமாக திருவள்ளூர் மாவட்டம் கருதப்படுவதால், கடலோரப் பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று மின் வாரிய துறையின் அதிகாரிகளுக்கு அரசின் சார்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, மின் வாரிய அதிகாரிகள் எல்லா இடத்திலும் தயார் நிலையில் இருக்கின்றனர். மின் தடை ஏதும் ஏற்படாமல் உடனடியாக சூழ்நிலையை சமாளிக்க கூடிய அளவுக்கு களப்பணியாளர்களையும் தளவாடப் பொருட்களையும் நாங்கள் இப்போது சேமித்து வைத்துள்ளோம். எந்த சூழ்நிலையும் சமாளிக்கக் கூடிய வகையில் தளவாடப் பொருட்களை கொண்டு செல்வதற்காக லாரி, ஜே.சி.பி மற்றும் கிரேன் போன்ற வாகனங்களும் தயார் நிலையில் உள்ளது.

எல்லாவிதத்திலும், மின்தடை ஏற்படாத வகையிலும், அப்படி ஏதேனும் புயல் காற்றின் வேகத்தின் காரணமாக மின் தடை ஏற்பட்டாலும், உடனடியாக அந்த இடத்திலே பணிபுரிய மின் வாரியத்தின் ஊழியர்கள் எல்லா நிலையிலும் தயாராக இருக்கிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## ம.பி., ராஜஸ்தான், சத்தீஷ்கர் ஆகிய

# 3 மாநிலங்களில் ஆட்சி அமைக்கிறது பா.ஜ.க.

## தெலுங்கானாவில் மட்டும் காங்கிரஸ் வெற்றி

புதுடெல்லி,டிச. 04-

4 மாநில சட்டசபை தேர்தலுக்கான முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டதில் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கரில் பாரதீய ஜனதா கட்சி ஆட்சி அமைக்கிறது. தெலுங்கானாவில் மட்டும் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், தெலுங்கானா மற்றும் மிசோரம் ஆகிய 5 மாநில சட்டப்பேரவை தேர்தல் தேதியை தேர்தல் ஆணையம் கடந்த அக்டோபர் 9-ம் தேதி அறிவித்தது. 5 மாநிலங்களிலும் நவம்பர் 7 முதல் 30-ம் தேதி வரை வாக்குப் பதிவு நடைபெறும் என்றும் டிசம்பர் 3-ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்றும் அறிவித்தது.

அதன்படி, சத்தீஸ்கரில் நவம்பர் 7, 17 ஆகிய தேதிகளிலும், மிசோரமில் நவம்பர் 7, மத்திய பிரதேசத்தில் நவம்பர் 17, ராஜஸ்தானில் நவம்பர் 25, தெலுங்கானாவில் நவம்பர் 30 ஆகிய தேதிகளில் தேர்தல் நடைபெற்றது.

இந்த நிலையில் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள 119 தொகுதிகளுக்கும் கடந்த 30-ம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடந்து முடிந்தது. இதில், 71.07 சதவீத வாக்குகள் பதிவானதாக மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

ராஜஸ்தானில் மொத்தம் 200 சட்டப்பேரவை தொகுதிகள் உள்ளன. இவற்றில், கங்காநகர் மாவட்டத்தின் காரன்பூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் குர்மீத் சிங் இறந்ததால், அந்த தொகுதியில் மட்டும் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது. எஞ்சிய 199 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக கடந்த மாதம் 25-ம் தேதி தேர்தல் நடைபெற்றது. ராஜஸ்தானில் பா.ஜ.க. - காங்கிரஸ் இடையே நேரடி போட்டி நிலவியது.

சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள 90 சட்டப்பேரவை தொகுதிகளில் 20 தொகுதிகளுக்கு கடந்த நவம்பர் 7-ம் தேதி முதல் கட்ட வாக்குப்பதிவு நடந்தது. நவம்பர் 17-ம் தேதி இரண்டாவது கட்டமாக மீதமுள்ள தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற்றது. இரு கட்ட தேர்தல்களையும் சேர்த்து சத்தீஸ்கர் தேர்தலில் 76.31 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தது. இந்த மாநிலத்தில் பா.ஜ.க. - காங்கிரஸ் இடையே நேரடி போட்டி நிலவியது.

ஐந்து மாநில சட்டப்பேரவைகளுக்கு நடைபெற்ற தேர்தலில் மிசோரம் தவிர்த்த நான்கு மாநிலங்களில் வாக்கு எண்ணிக்கை நேற்று விறுவிறுப்பாக நடைபெற்றது. இதில் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய 3 மாநிலங்களில் பாரதீய ஜனதா கட்சி பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. அதாவது மெஜாரிட்டிக்கு தேவையான இடங்களை இந்த மூன்று மாநிலங்களில் பாரதீய ஜனதா கைப்பற்றி ஆட்சி அமைக்கிறது.

ராஜஸ்தானில் முன்னாள் முதல்வர் வசுந்தரா ராஜே அமோக வெற்றி பெற்றுள்ளார். இந்த வெற்றியை பாரதீய ஜனதா கட்சி தொண்டர்கள் பட்டாசு வெடித்து கொண்டாடி வருகின்றனர். அதே போல சத்தீஸ்கர் மாநிலத்திலும் பா.ஜ.க. ஆட்சி அமைக்கிறது. ஆறுதல் பரிசாக காங்கிரஸ் கட்சிக்கு ஒரே ஒரு மாநிலத்தில் மட்டும் வெற்றி கிடைத்துள்ளது. அதாவது, தெலுங்கானா மாநிலத்தில் சந்திரசேகரராவ் கட்சி எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை. காங்கிரஸ் கட்சி இந்த மாநிலத்தில் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கிறது. அனேகமாக வரும் 9-ம் தேதி பதவியேற்பு விழா இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

3 மாநிலங்களில் பா.ஜ.க. வெற்றி குறித்து கருத்து தெரிவித்து வரும் பா.ஜ.க. தலைவர்கள் இது பிரதமர் மோடியின் அர்ப்பணிப்பு மற்றும் வளர்ச்சி அரசியலுக்கு கிடைத்த வெற்றி என்று கூறியுள்ளனர். தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையும் அதே கருத்தை தெரிவித்துள்ளார். இந்த தேர்தலில் இண்டியா கூட்டணிக்கே அதிக வெற்றி கிடைக்கும் என்று பேசப்பட்டது. ஆனால் எதிர் பார்த்ததற்கு மாறாக பா.ஜ.க.வெற்றிக்கனியை சுவைத்திருப்பது காங்கிரசார் மத்தியில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி உள்ளது.

# புயல் கரையை கடக்கும்போது மக்கள் வெளியே வரவேண்டாம்

## தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா அறிவுறுத்தல்

சென்னை, டிச. 04-

புயல் கரையை கடக்கும் போது மக்கள் வெளியே வர வேண்டாம் என்று தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா அறிவுறுத்தி உள்ளார்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா மயிலாப்பூரில் உள்ள தீயணைப்பு நிலையத்தில் நேற்று ஆய்வு மேற்கொண்டார். பேரிடர் மீட்பு பணிக்காக தயார் நிலையில் உள்ள தளவாடங்களை அவர் பார்வையிட்டார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

கடந்த 2 ஆண்டுகளில் மழை நீர் வடிகால் பணிகள் பல பகுதிகளில் சரி செய்யப்பட்ட காரணத்தால் மழைநீர் தேங்கினாலும் சில மணி நேரங்களில் வடிந்து விடுகிறது. ஒரு சில பகுதிகளை தவிர மற்ற இடங்களில் பெரிய பாதிப்பு இல்லை.

கடந்த 3 நாட்களாக பெய்த மழையின் போது சென்னையில் தண்ணீர் தேங்கிய 150 இடங்களை அடையாளம் கண்டுள்ளோம். அந்த பகுதியில் தேங்கிய தண்ணீரை மோட்டார் மூலம் அகற்றி உள்ளோம். சென்னையில் 43 தீயணைப்பு நிலையங்களில் உள்ள வீரர்கள் மீட்பு பணிகளுக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளனர்.


செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களையும் சேர்த்து 1,700 பேர் தயார் நிலையில் உள்ளனர். இது தவிர மீனவர் துறை சார்பாக மீனவ நண்பர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம். மீனவர்கள் கடலுக்குள் செல்லக் கூடாது என்று அறிவுறுத்தி உள்ளோம்.

அதே மாதிரி பொது மக்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் என்னவென்றால், புயல் நெருங்கி வரும்போது காற்று வேகமாக வீசும் என்பதால் வீட்டில் இருந்து வெளியே வராமல் இருந்தால் நன்றாக இருக்கும். சென்னையில் பல வீடுகளுக்கு கேபிள் மூலம் மின் இணைப்பு வழங்கப்படுகிறது. இங்கு மின்சார ஜங்ஷன் பாக்ஸ் பல இடங்களில் 3 அடிக்கு உயர்த்தி வைத்திருப்பதால் தண்ணீர் தேங்கினாலும் அப்பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்படாமல் தடையின்றி மின்சாரம் கிடைக்கும்.


அதிகம் காற்று வீசும் போது மட்டும் உயர்மின் அழுத்தம் கொண்ட இடங்களில் கட்டாயம் மின் சப்ளை நிறுத்தப்படும். ஆனால் கேபிள் மூலம் மின்சாரம் வழங்கும் இடங்களில் தடை ஏற்படாத அளவுக்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| ↑ 492.75 | ↑ 134.75 |
| பாயின்ட் 67481.19 | பாயின்ட் 20267.9 |



**தங்கம்**
1 சவரன் ₹47,320
1 கிராம் ₹5,915



**வெள்ளி**
1 கிலோ ₹83,500
1 கிராம் ₹83.50

**$ டாலர்** ₹83.22

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

# பிலிப்பைன்சில் கிறிஸ்தவ பிரார்த்தனை கூட்டத்தில் குண்டுவெடிப்பு: 3 பேர் பலி

**மணிலா, டிச. 04-**

பிலிப்பைன்சில் கிறிஸ்தவ பிரார்த்தனை கூட்டத்தில் நேற்று நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 3 பேர் உயிரிழந்தனர்.

பிலிப்பைன்சின் தெற்கு பகுதியில் உள்ள மராவி நகரின் பல்கலைக் கழக உடற்பயிற்சி கூடத்தில் நேற்று காலையில் கிறிஸ்தவர்களின் சிறப்பு பிரார்த்தனை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டு பிரார்த்தனை செய்தனர்.

அப்போது திடீரென அங்கு குண்டு வெடித்தது. இதில் பலர் தூக்கி வீசப்பட்டு உடல் உறுப்புகள் சிதைந்த நிலையில் துடித்தனர். தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். அப்பகுதியில் பாதுகாப்பையும் பலப்படுத்தினர்.

இந்த குண்டுவெடிப்பில் 3 பேர் உயிரிழந்தனர். பலர் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 2 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்படுகிறது.



குண்டுவெடிப்பைத் தொடர்ந்து ராணுவம் மற்றும் போலீசார் அப்பகுதியைச் சுற்றி வளைத்து, ஆரம்பகட்ட விசாரணையை மேற்கொண்டனர். தாக்குதல் நடத்தியவர்களை அடையாளம் காண்பதற்காக அங்குள்ள சி.சி.டி.வி. கேமராக்களில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தனர்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மராவி நகரில் நடந்த இந்த தாக்குதல் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. இது தீவிரவாத செயல் என்பது தெளிவாக தெரிகிறது என்றும், இரண்டு நபர்களுக்கு இடையிலான சாதாரண மோதலாக இருக்க முடியாது என்றும் பல்கலைக் கழக வளாகத்தின் பாதுகாப்பு அதிகாரி கூறியிருக்கிறார்.

குண்டுவெடிப்புக்கு யார் காரணம் என்பது இன்னும் தெளிவாக தெரியவில்லை. எனினும், பல ஆண்டுகளாக ராணுவம் மற்றும் போலீசாரின் கட்டுப்பாடுகளை மீறி இயங்கி வரும் இஸ்லாமிய போராளிகள் இந்த தாக்குதலில் ஈடுபட்டிருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கின்றனர்.

# ஜெர்மனியில் கடும் பனிப்பொழிவால் விமானம், ரயில் போக்குவரத்து பாதிப்பு

**பெர்லின், டிச. 04-**

ஜெர்மனியில் கடும் பனிப்பொழிவால் விமானம் மற்றும் ரயில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் கால்பந்து போட்டியும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

தெற்கு ஜெர்மனியில் நேற்று முன்தினம் கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டது. இதனால் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டது. விமான நிலையங்கள் மூடப்பட்டன. இதனால் விமான போக்குவரத்து தடைப்பட்டது. அத்துடன் ரயில் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டன.

பேயர்ன் முனிசி- யூனியன் பெர்லின் ஆகிய அணிகளுக்கு இடையில் நடைபெற இருந்த கால்பந்து போட்டி ரத்து செய்யப்பட்டது. மேலும், பல போட்டிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

கடும் பனிப்பொழிவால் 760 விமான சேவை பாதிக்கப்பட்டன. ஜெர்மனியின் முக்கிய விமான நிலையங்களில் ஒன்றான முனிச் மூடப்பட்டது. வெள்ளிக்கிழமையில் இருந்து சனிக்கிழமை வரை 40 செ.மீ. அளவிற்கு பனிப்பொழிவு இருந்துள்ளது. பொதுமக்கள் வீட்டிற்குள்ளே இருக்குமாறு அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

# பிலிப்பைன்ஸில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கையும் விடப்பட்டது

**மிண்டானோ, டிச. 04-**

பிலிப்பைன்ஸின் மிண்டானோவில் நேற்று 7.5 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக ஐரோப்பிய- மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் 63 கிமீ ஆழத்தில் இருந்ததாகவும், நிலநடுக்கத்தை அடுத்து அமெரிக்க சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்த விவரம் வெளியாகவில்லை.



கடந்த மாத தொடக்கத்தில், தெற்கு பிலிப்பைன்ஸில் 6.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தில் 8 பேர் உயிரிழந்தனர். நவம்பர் 17 அன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சாரங்கனி, தெற்கு கோடாபாடோ மற்றும் டாவோ ஒக்சிடென்டல் மாகாணங்களில் இறப்புகள் பதிவாகின.

அதே நேரத்தில் 13 பேர் காயமடைந்தனர். இது ஏராளமான மக்களை பீதிக்குள்ளாக்கியது மற்றும் 50-க்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் கட்டிடங்கள் சேதமானது குறிப்பிடத்தக்கது.

# நிலச்சரிவு: ஜாம்பியாவில் சுரங்கத்தில் சிக்கிய 7 தொழிலாளர்கள் உயிரிழப்பு



**லுசாகா, டிச. 04-**

ஜாம்பியாவில் ஏற்பட்ட நிலச்சரிவால் தாமிர சுரங்கங்களில் தொழிலாளர்கள் வெளியேற முடியாமல் சிக்கி கொண்டனர். இந்நிலையில், தொழிலாளர்களில் 7 பேர் உயிரிழந்திருப்பதாக நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்க நாடான ஜாம்பியாவில் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. இந்நிலையில் தலைநகர் லுசாகாவில் இருந்து 400 கி.மீ தொலைவில் உள்ள சிங்கோலா நகரில் வியாழக்கிழமை இரவு கனமழையால் பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் அங்குள்ள திறந்த வெளி தாமிர சுரங்கங்கள் இடிந்து விழுந்தன. நுழைவு வாயில்கள் வழியாக வெள்ளம் புகுந்தது. இதனால் சுரங்கத் தொழிலாளர்கள் வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டனர். அப்பகுதியில் மீட்புப் பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், தொழிலாளர்களில் 7 பேர் உயிரிழந்திருப்பதாக நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 20 பேரைக் காணவில்லை. அவர்களும் உயிர்பிழைத்திருக்க வாய்ப்பு இல்லை என கருதப்படுகிறது.

இறந்தவர்களின் உடல்கள் எதுவும் இதுவரை மீட்கப்படவில்லை. எத்தனை பேர் சுரங்கப் பாதைகளில் சிக்கியிருக்கிறார்கள்? என்ற சரியான விவரமும் வெளியாகவில்லை. ஆனால், குறைந்தபட்சம் 36 பேர் சுரங்கப்பணியில் ஈடுபட்டிருக்கலாம் என சிங்கோலா மாவட்ட கமிஷனர் தெரிவித்திருக்கிறார்.

தாமிர தாதுக்களை வெட்டி எடுப்பதற்காக சுரங்க உரிமையாளர்களுக்கு தெரியாமல் சட்டவிரோதமாக இந்த தொழிலாளர்கள் பாதுகாப்பற்ற முறையில் சுரங்கம் தோண்டியதாகவும், அவர்கள் 3 வெவ்வேறு சுரங்கப் பாதைகளில் சிக்கியிருப்பதாகவும் அவர் கூறினார்.

சுரங்க விபத்து குறித்து கேள்விப்பட்ட ஜாம்பியா அதிபர், தனது கவலையை தெரிவித்துள்ளார். மேலும், சுரங்கத்தினுள் தொழிலாளர்கள் சிக்கியிருக்கும் பகுதியை சென்றடைவதற்காக அயராது உழைக்கும் மீட்புப் பணியாளர்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

## மீண்டும் எழுச்சியுடன் வருவோம்:

# டி.ஆர்.எஸ். கட்சியின் செயல் தலைவர் ராமாராவ் நம்பிக்கை



**ஐதராபாத், டிச. 04-**

தெலுங்கானா சட்டசபை தேர்தலில் தோல்வியை ஒருபாடமாக ஏற்றுக் கொண்டு, மீண்டும் எழுச்சியுடன் வருவோம் எனவும், ஆட்சியமைக்க உள்ள காங்கிரஸ் கட்சிக்கு வாழ்த்துக்கள் என்று டி.ஆர்.எஸ். கட்சியின் செயல் தலைவர் கே.டி.ராமாராவ் தெரிவித்துள்ளார்.

தெலுங்கானாவில் மொத்தம் 119 சட்டப்பேரவை தொகுதிகள் உள்ளன. இவற்றிற்கு ஒரே கட்டமாக நவம்பர் 30 -ம் தேதி தேர்தல் நடத்தப்பட்டது. மொத்தம் 2,290 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இந்த தேர்தலில் 71.34 சதவீத வாக்குகள் பதிவாகின. இந்த மாநிலத்தில் காங்கிரஸ், பி.ஆர்.எஸ்., பா.ஜ.க. இடையே மும்முனைப் போட்டி நிலவியது. பெரும்பாலான கருத்துக் கணிப்புகள் அம்மாநிலத்தில் காங்கிரஸ் கட்சிக்கே வெற்றி என்று கணித்தன.

இந்த நிலையில், தெலுங்கானாவில் தேர்தல் தோல்வியை ஏற்றுக் கொண்ட பாரத ராஷ்ட்ரிய சமீதி கட்சி, தொடர்ந்து 2 முறை ஆட்சியமைக்க வாய்ப்பு வழங்கிய மக்களுக்கு நன்றி என அக்கட்சியின் செயல் தலைவர் கே.டி.ராமாராவ் தெரிவித்துள்ளார். இந்த தோல்வியை ஒருபாடமாக ஏற்றுக் கொண்டு, மீண்டும் எழுச்சியுடன் வருவோம் எனவும், ஆட்சியமைக்க உள்ள காங்கிரஸ் கட்சிக்கு தனது வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தல் அட்டவணை 8-ம் தேதி வெளியீடு

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு

**இஸ்லாமாபாத், டிச. 04-**

பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தல் அட்டவணை வரும் 8-ம் தேதி வெளியிடப்படும் என்று அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் 342 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 272 உறுப்பினர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாகிஸ்தான் நாடாளுமன்றத்துக்கு அடுத்த ஆண்டு பிப்ரவரி 8-ம் தேதி தேர்தல் நடைபெறும் என கடந்த சில தினங்களுக்கு முன் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியானது.

இது குறித்து செய்தியாளர்களிடம் கூறிய அந்நாட்டு தலைமை தேர்தல் ஆணையர் சிக்கந்தர் சுல்தான் ராஜா, தொகுதி வரையறைகள் முடிவுற்று, தேர்தலை நடத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. தேர்தல் அட்டவணை இம்மாதம் 8-ம் தேதி வெளியிடப்படும் என்று கூறினார்.

**04-12-2023**




**மேஷம்:-** குழந்தைகள் மூலம் தொல்லை உண்டாகும். நண்பர்களுடன் வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரிகளுக்கு தொழிலில் எதிர்பார்த்த இலாபம் இருக்காது.

**ரிஷபம்:-** வழக்குகளை இன்று தள்ளிப் போடுவது நல்லது. மதிப்பு மிக்க பொருட்கள் பாதுகாப்பை உறுதி படுத்திக் கொள்ளுங்கள். அன்னையின் உடல் நிலையில் மிகுந்த அக்கறை தேவை.

**மிதுனம்:-** தொழில் தொடர்பான தூரப் பயணங்களால் ஆதாயம் ஏற்படும். எடுத்த காரியங்கள் அனைத்தும் வெற்றி பெறும். உடன்பிறப்புக்களின் உதவி மனத் தெம்பைத் தரும்.

**கடகம்:-** உறவுகளிடையே வீண் வாக்குவாதங்களை தவிர்த்தால் வீட்டில் நிம்மதி நிலவும். மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வது அவசியமாகும். தொழிலில் அதிக முதலீடு செய்வதைத் தவிருங்கள்.

**சிம்மம்:-** பல வழிகளிலும் பணம் வந்து மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். பெண்கள் விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வர். ஆணையிடும் அதிகார பதவி கிடைக்கும்.

**கன்னி:-** அதிக குடும்பச் செலவுகள் காரணமாகக் கையிருப்பு குறையும். உங்கள் உண்மையான உழைப்பு விழலுக்கு இறைத்த நீராகும். நண்பர்களிடம் பகைமை பாராட்டாது இருப்பது நல்லது.

**துலாம்:-** பலவழிகளிலும் இலாபம் பெருகும். சுகம், சந்தோஷம், பயணத்தில் உல்லாசம் ஆகியவை ஏற்படும். தனவரவு கூடும். வியாபாரிகளுக்கு தொழில் விருத்தி ஏற்படும்.

**விருச்சிகம்:-** தனலாபம் பெருகும். மனைவியின் ஒத்துழைப்பால் மனம் மகிழும். மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். வியாபாரிகள் வாடிக்கையாளரை கவர பரிசு திட்டங்களை அறிவிப்பர்.

**தனுசு:-** புனித யாத்திரைகள் மன மகிழ்ச்சியுடன் சென்று வருவீர்கள். .பலவழிகளிலும் பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். கனிவான பேச்சால் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள்.

**மகரம்:-** வீட்டில் ஒற்றுமை இன்மையால் ஒருவிதக் குழப்பம் நிலவும். இஷ்டத்துக்கு மாறாக எல்லாம் நடக்கும். சிலருக்கு கோர்ட் படி ஏற வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

**கும்பம்:-** தம்பதிகள் ஒற்றுமையாக, குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். பதவி உயர்வு வாகன யோகம் ஏற்படும். தர்ம காரிய ஈடுபாடு வாழ்க்கையில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தும்.

**மீனம்:-** பெண்களால் இலாபம் ஏற்படும். பிள்ளைகள் உங்களுக்குப் பெருமை சேர்ப்பர். பிரிந்திருந்த உறவுகள் பேரன்பால் ஒன்று சேரும். எல்லா வகையிலும் சந்தோஷம் அதிகரிக்கும்.



மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க.மருத்துவ அணி செயலாளர் அஜய் ஏற்பாட்டில் தி.மு.க., சமாஜ்வாதி உள்ளிட்ட கட்சியிலிருந்து ஆர்.ராஜசேகர், ஆர். கௌதம், ஏ.ஆர். சுடலை, நாகமணி, விஷ்ணு, கௌதம ராஜ், தினேஷ் குமார், நீலேஷ் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு முன்னிலையில் அ.தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். அருகில் நிர்வாகிகள் எம்.எஸ்.பாண்டியன், பரவைராஜா,நீதிகாந்த், பைக்காரா முத்துவேல் ஆகியோர் உள்ளனர்.

# 3 மாநிலத்தில் பா.ஜ.க.வெற்றி: மகராஷ்டிர முதல்வர் கருத்து

**மும்பை, டிச. 04-**

நேற்று வாக்கு எண்ணிக்கை நடந்த 4 மாநில தேர்தல்களில் ம.பி., ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய 3 மாநிலத் தேர்தல்களில் பா.ஜ.க.வின் இரட்டை எஞ்சின் அரசு சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெற்றுள்ளது, இவை அனைத்துக்கும் பிரதமர் மோடியின் அர்ப்பணிப்புதான் காரணம் என மகராஷ்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தெரிவித்துள்ளார்.

மும்பையின் பல்வேறு பகுதிகளில் நேற்று நடைபெற்ற தூய்மை இயக்கத்தில் மகராஷ்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டே கலந்து கொண்டு ஸ்வச்சதா அபியான் திட்டம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும், மும்பையில் உள்ள கமலா நேரு பூங்காவை ஏக்நாத் ஷிண்டே பார்வையிட்டார். அதைத் தொடர்ந்து பேசிய ஏக்நாத் ஷிண்டே கூறியதாவது,

மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தானில் பா.ஜ.க. வெற்றி பெறவிருக்கிறது. இந்த தேர்தல்களில் பா.ஜ.க.வின் இரட்டை எஞ்சின் அரசு சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெற்றுள்ளது. இவை அனைத்தும் பிரதமர் மோடி மற்றும் அவரது அர்ப்பணிப்பால்தான் நடந்திருக்கிறது என்று தெரிவித்தார். .

## தனி பின்கோடு-முத்திரையுடன்

# ஆண்டுக்கு ஒருமுறை செயல்படும் சபரிமலை தபால் அலுவலகம்

**திருவனந்தபுரம், டிச. 04-**

இந்தியாவிலேயே ஆண்டுக்கு ஒருமுறை தனி பின்கோடு மற்றும் முத்திரையுடன் செயல்படும் தபால் அலுவலகம் சபரிமலை ஐயப்பன் கோவிலில் உள்ளது.

சபரிமலை சன்னிதானத்தில் மாளிகைப்புரம் கோவில் அருகே இந்த தபால் நிலையம் செயல்படுகிறது. இந்த தபால் நிலையம் 1963-ம் ஆண்டு மண்டல பூஜை காலமான நவம்பர் 16-ம் தேதி திறக்கப்பட்டது. இந்த தபால் நிலையம் மண்டல மற்றும் மகர விளக்கு காலங்களில் மட்டும் செயல்படுகிறது.

தபால் அலுவலகங்களில் ஒரே மாதிரியான முத்திரை தான் பயன்படுத்தப்படும். ஆனால் சபரிமலைக்கு தனி முத்திரை வழங்கப்பட்டு உள்ளது. அதே போல் 689713 என்ற தனி பின்கோடு எண்ணும் கொடுக்கப்பட்டு உள்ளது.

இந்த தபால் நிலையத்துக்கு ஒரே ஒருவர் பெயருக்குத்தான் அத்தனை கடிதங்களும் வருகின்றன. அதாவது ஐயப்பன் பெயரில் சபரிமலைக்கு சென்று ஐயப்பனை தரிசிக்க முடியாதவர்கள் கடிதங்கள் வாயிலாக ஐயப்பனிடம் முறையிடுகிறார்கள். காணிக்கைகளை மணியார்டர் மூலம் அனுப்புகிறார்கள்.

இந்த தபால்களும், மணியார்டர் பணமும் ஐயப்பன் சன்னதியில் வைத்து பூஜிக்கப்பட்டு தபால் நிலையத்தில் ஒப்படைக்கப்படும். மேலும் சபரிமலை பிரசாதங்கள் இந்த தபால் நிலையம் மூலம் அனுப்பப்படுகிறது. தனித்துவ மிக்க சபரிமலை தபால் நிலைய முத்திரை தங்கள் வீடு தேடி வருவதை புனிதமாக கருதுகிறார்கள்.

ஐயப்பன் முத்திரையுடன் கூடிய அஞ்சல் அட்டைகள், இன்லேன்ட் லெட்டர்கள் ஆகியவற்றையும் சபரிமலை யாத்திரை நினைவாக பக்தர்கள் வாங்கி செல்கிறார்கள். மகர விளக்கு பூஜைக்கு பிறகு இந்த தபால் நிலையம் மூடப்பட்டு விடும். முத்திரைகள் பம்பாவில் தனி அறையில் வைத்து பூட்டி பத்திரமாக பாதுகாக்கப்படும்.

# பரங்கிமலை மெட்ரோ பார்க்கிங் நாளை வரை தற்காலிக மூடல்

**சென்னை, டிச. 04-**

பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலைய வாகன நிறுத்தும் இடம் நாளை வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது,

தொடர் மழையின் காரணமாக பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையத்தில் வாகன நிறுத்தும் பகுதியில் மழைநீர் அதிகமாக தேங்கி உள்ள காரணத்தினால் வாகன நிறுத்துமிடம் நாளை 05-ம் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி வரை தற்காலிகமாக மூடப்படுகிறது.

பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையத்தில் வாகனங்களை நிறுத்தியுள்ள உரிமையாளர்கள் தங்களது இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை உடனடியாக எடுத்து செல்லுமாறு சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்து கொள்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து வாகன உரிமையாளர்கள் பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து வாகனங்களை எடுத்து செல்லாத பட்சத்தில் வாகனத்திற்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் பொறுப்பேற்காது.

பெய்து வரும் கனமழையின் காரணமாக பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலைய வாகன நிறுத்தும் பகுதியில் அதிகமாக மழைநீர் தேங்குவதற்கான வாய்ப்புகள் இருப்பதால் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மெட்ரோ பயணிகள் மற்றும் பொதுமக்கள் பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் மற்றும் நங்கநல்லூர் மெட்ரோ ரயில் நிலைய வாகன நிறுத்தும் இடத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# செம்பரம்பாக்கம் ஏரியில் உபரிநீர் திறப்பு 3,000 கன அடியாக உயர்வு

**சென்னை,டிச. 04-**

செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து திறந்து விடப்படும் உபரி நீரின் அளவு 3,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 24 அடி உயரம் கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியில் தற்போது நீர் இருப்பு 20.74 அடியாக உள்ளது. நேற்று காலை நீர் திறப்பு 1,500 கன அடியாக குறைக்கப்பட்டிருந்த நிலையில், 3,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து கனமழை பெய்ய வாய்ப்புள்ளதால் செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டத்தை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். மேலும் உபரிநீர் வெளியேற்றத்தை அதிகரிப்பது குறித்தும் ஆலோசனை நடத்தினர். உபரி நீர் செல்லும் அடையாற்றின் கரையோரப் பகுதிகளில் வசிப்பவர்களை எச்சரிக்கையாக இருக்குமாறு அரசு அறிவுறுத்தியுள்ளது.

# 4 மாநில சட்டசபை தேர்தல் முடிவுகள்: தலைவர்கள் கருத்து

**புதுடெல்லி, டிச. 04-**

மத்திய பிரதேசம், தெலுங்கானா, சத்தீஸ்கர், ராஜஸ்தான் ஆகிய 4 மாநில தேர்தல் முடிவுகள் குறித்து அரசியல் தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இது பிரதமர் மோடியின் வளர்ச்சி அரசியலுக்கான வெற்றி. ராஜஸ்தான், மத்திய பிரதேசத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்கிறது என்று மத்திய அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார். தெலுங்கானா பா.ஜ.க. மூத்த தலைவர் சுபாஷ் கூறுகையில், மக்கள் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் பா.ஜ.க. ஏற்கும். வெற்றி பெறப்போகும் எம்.எல்.ஏ.க்கள் மீது காங்கிரஸ் தலைமைக்கு நம்பிக்கை இல்லை. பாரத் ராஷ்ட்ர சமிதி கட்சி எம்.எல்.ஏ.,க்களை விலைக்கு வாங்கி விடும் என காங்கிரஸ் பயப்படுகிறது. அதனால் பல பஸ்களை தயாராக வைத்திருக்கிறார்கள் என்றார்.

மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறுகையில்,

மத்தியபிரதேசத்தில் பா.ஜ.க.வுக்கு மிகப்பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது. பா.ஜ.க. அரசு மீது மக்களுக்கு நம்பிக்கை உள்ளது என்றார். மத்திய அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா கூறுகையில், ம.பி.,யில் பா.ஜ.க. மீது நம்பிக்கை வைத்து ஓட்டளித்த மக்களுக்கு நன்றி. இது முதல்வர் சிவராஜ்சிங் சவுகான் அரசின் மக்கள் நலத்திட்டங்களுக்கான வெற்றி. காங்கிரஸ் கட்சியினர் வெற்றி கொண்டாட்டத்திற்காக லட்டு தயாரித்தனர். போஸ்டர் தயார் செய்தனர். நாங்கள் அமைதியான தேர்தல் பணி ஆற்றினோம். நாங்கள் எதிர்பார்த்ததை விட மிகப்பெரிய வெற்றி கிடைத்துள்ளது. மக்களுக்கு நன்றி. இவ்வாறு அவர் கூறினார்.

கர்நாடகா துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் கூறுகையில், தெலுங்கானா மக்கள் மாற்றத்தை விரும்பினர். மாற்றம், வளர்ச்சியை எதிர்பார்த்து காங்கிரஸ் கட்சிக்கு வாய்ப்பளித்துள்ளனர். மாநில காங்கிரஸ் தலைவர் ரேவந்த் ரெட்டி தலைமையில் சிறப்பாக செயல்பட்டதால் வெற்றி சாத்தியமானது. முதல்வர் யார் என்பதை தலைமை முடிவெடுக்கும் எனக் கூறினார்.

மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் கூறுகையில், காங்கிரஸ் குற்றச்சாட்டுகள் தவிடுபொடியாகியது. பா.ஜ.க.வுக்கு பெரும்பான்மை வெற்றி கிடைத்துள்ளது என்றார். மத்திய அமைச்சர் நிதின் கட்காரி, ம.பி., ராஜஸ்தான், சத்தீஸ்கரில் டவுள் இன்ஜின் ஆட்சி என்றார்.

## ராஜஸ்தான் சட்டசபை தேர்தல்:
# முன்னாள் முதல்வர் வசுந்தரா ராஜே வெற்றி

**ஜெய்ப்பூர், டிச. 04-**

ராஜஸ்தான் முன்னாள் முதல்வரான வசுந்தரா ராஜே, ஜல்ராபட்டன் தொகுதியில் 53,193 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.



ராஜஸ்தான் சட்டசபை தேர்தல் கடந்த நவம்பர் 25-ம் தேதி நடந்தது. இந்த தேர்தலில் ராஜஸ்தானில் பா.ஜ.க. ஆட்சியமைக்க போவது உறுதியாகி உள்ளது.

இதனிடையே பா.ஜ.க. வேட்பாளரும் ராஜஸ்தான் முன்னாள் முதல்வரான வசுந்தரா ராஜே, ஜல்ராபட்டன் தொகுதியில் வெற்றி பெறுள்ளார். காங்கிரஸ் வேட்பாளர் ராம்லால் மற்றும் பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் மகாசூட் ஆகியோரை விட அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

வசுந்தரா ராஜே 53,193 வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரஸின் ராம்லாலை தோற்கடித்தார்.

இந்த வெற்றி குறித்து கருத்து தெரிவித்த வசுந்தரா ராஜே.. இது பிரதமர் மோடியின் வெற்றி, உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் வியூகத்தால் வெற்றி கிடைத்தது. பா.ஜ.க. தொண்டர்கள் மற்றும் பா.ஜ.க. தேசிய தலைவர் ஜேபி நட்டா ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

முன்னதாக 2013-ல், பா.ஜ.க.வின் வசுந்தரா ராஜே ஜல்ராபட்டன் தொகுதியில் பதிவான மொத்த வாக்குகளில் 33.62 சதவீதம் பெற்றார். தன்னை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் மீனாட்சி சந்திராவத்தை 60,896 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து வெற்றி பெற்றார். 2008 தேர்தலிலும் பா.ஜ.க.வின் வசுந்தரா ராஜே இந்தத் தொகுதியில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட மோகன் லாலை 32,581 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

வாக்குகள் விவரம்: வசுந்தரா ராஜே (பா.ஜ.க.)- 1,38,831 ராம்லால் (காங்.) - 85,638, மகாசத் (பகுஜன் சமாஜ் கட்சி) - 3,431, பவன் குமார் மெஹர் (இந்திய மக்கள் பசுமை கட்சி) - 2,177.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# இண்டியா கூட்டணியின் அடுத்த கூட்டம் டெல்லியில் வரும் 6-ம் தேதி நடக்கிறது
## காங்கிரஸ் தலைவர் கார்கே தகவல்

**புதுடெல்லி, டிச. 04-**

இண்டியா கூட்டணியின் அடுத்த கூட்டம் வரும் 6-ம் தேதி டெல்லியில் நடைபெறவிருப்பதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

தெலுங்கானா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய 4 மாநிலங்களில் கடந்த 30-ம் தேதி வரை பல்வேறு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த 4 மாநில சட்டசபை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்றது.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே இண்டியா கூட்டணியின் அடுத்த கூட்டம் வரும் 6-ம் தேதி டெல்லியில் நடைபெறவிருப்பதாகவும், கூட்டணி கட்சிகள் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

வரும் 2024-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வைத் தோற்கடிக்கும் முடிவுடன் 26 எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பா.ஜ.க.வுக்கு எதிராக கூட்டணி அமைத்தன. இந்தக் கூட்டணிக்காக கட்சிகளை இணைக்கும் வேலைகளில் ஐக்கிய ஜனதா தளம் தலைவர் முக்கிய பங்காற்றினார்.

கடந்த ஜூன் மாதம் இக்கூட்டணியின் முதல் கூட்டம் பாட்னாவில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து இரண்டாவது கூட்டம் ஜூலையில் பெங்களூருவில் நடைபெற்றது. அப்போதுதான் கூட்டணிக்கு இண்டியா என்ற பெயரும் சூட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து, மூன்றாவது கூட்டம் மும்பையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## மிக்ஜாம் புயலால் 3 விமானங்கள் ரத்து:
# சென்னையில் 9 விமானங்களின் வருகை, புறப்பாடு தாமதம்

**சென்னை, டிச. 04-**

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று மற்றும் நாளை மிக்ஜாம் புயல் காரணமாக, நேற்று சென்னை விமான நிலையத்தில் 9 விமானங்களின் வருகை, புறப்பாட்டில் சுமார் ஒரு மணி முதல் 5 மணி நேரம் தாமதம் ஏற்பட்டது. மேலும், 3 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன.



இதனால் பயணிகள் பெரிதும் அவதிப்பட்டனர். இதனால் விமானங்களின் வருகை, புறப்பாடு, ரத்து குறித்து சம்பந்தப்பட்ட ஏர்லைன்ஸ் நிறுவனங்களிடம் பயணிகள் தெரிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் தாக்கக் கூடிய மிக்ஜாம் புயல் காரணமாக, சென்னை விமான நிலையத்தில் இருந்து நேற்று காலை 9.40 மணியளவில் மும்பைக்கு செல்லும் விஸ்தாரா ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம், நேற்று மாலை 4.30 மணியளவில் சென்னையில் இருந்து ஐதராபாத் செல்லும் இன்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் ஆகிய 2 விமானங்களின் புறப்பாடு ரத்து செய்யப்பட்டது.அதே போல் நேற்று காலை 8.55 மணியளவில் மும்பையில் இருந்து சென்னை வரும் விஸ்தாரா ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் என மொத்தம் 3 விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டது. அதே போல் சென்னையில் இருந்து புறப்படும் சிங்கப்பூர், துபாய், சார்ஜா, அந்தமான், மும்பை, ஜோத்பூர், ஐதராபாத் ஆகிய 7 விமானங்களின் புறப்பாடு மற்றும் துபாய், மும்பை ஆகிய பகுதிகளில் இருந்து சென்னைக்கு வரும் 2 விமானங்களின் வருகை என மொத்தம் 9 விமானங்கள் சுமார் ஒரு மணி நேரத்தில் இருந்து 5 மணி நேரம் வரை தாமதமாக இயக்கப்பட்டன.

எனவே, அனைத்து விமான பயணிகளும் முன்னதாகவே தாங்கள் பயணிக்க வேண்டிய சம்பந்தப்பட்ட ஏர்லைன்ஸ் நிறுவன அதிகாரிகளை தொடர்பு கொண்டு, தாங்கள் செல்ல வேண்டிய ஊர்களின் விமான புறப்பாடு, வருகை பற்றி விவரங்களை தெரிந்து கொண்டு, அதற்கேற்றார்போல் தங்களின் பயணங்களை அமைத்து கொள்ள வேண்டும் என்று சென்னை விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தெலுங்கானா காங். தலைவருக்கு வாழ்த்து தெரிவித்த டி.ஜி.பி.

**அமராவதி, டிச. 04-**

தெலுங்கானா காங்கிரஸ் தலைவர் ரேவந்த் ரெட்டியை சந்தித்து அம்மாநில டி.ஜி.பி அஞ்சனி குமார் வாழ்த்து தெரிவித்தார்.

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் வாக்குகள் எண்ணும் பணி நேற்று நடைபெற்றது. இதில், தெலுங்கானாவில் காங்கிரஸ் கட்சி ஆரம்பம் முதலே முன்னிலை வகித்து வெற்றி பெற்றுள்ளது.

தெலுங்கானாவில் சந்திரசேகர் ராவின் பாரத ராஷ்டிர சமிதி ஆட்சியில் இருந்து வரும் நிலையில் தற்போது காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்றி உள்ளது. இதனால் தெலங்கானாவில் காங்கிரஸ் தொண்டர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் தெலுங்கானா காங்கிரஸ் கமிட்டி தலைவர் ரேவந்த் ரெட்டி, கோடங்கல், காமாரெட்டி ஆகிய இரு தொகுதிகளிலும் போட்டியிட்டார். தெலுங்கானா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ரேவந்த் ரெட்டி, ஐதராபாத்தில் உள்ள தனது வீட்டில் இருந்து காங்கிரஸ் அலுவலகத்துக்கு பேரணியாக சென்று காரில் நின்றபடி அவர் மக்களிடம் நன்றி தெரிவித்தார். முன்னதாக, தெலுங்கானா டி.ஜி.பி அஞ்சனி குமார், ரேவந்த் ரெட்டியை சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

# 4 மாநில தேர்தல் முடிவு: நடிகை குஷ்பு கருத்து

**சென்னை, டிச. 04-**



4 மாநிலத் தேர்தலில் பா.ஜ.க.வின் வெற்றி பிரதமர் மோடி மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை பிரதிபலிக்கிறது என்று நடிகை குஷ்பு தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. தேசிய மகளிர் அணி உறுப்பினரும், பிரபல நடிகையுமான குஷ்பு 4 மாநில தேர்தல் முடிவு குறித்து கூறியதாவது:-

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர் மாநிலங்களில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க இருக்கிறது. 4 மாநிலத் தேர்தலில் பா.ஜ.க.வின் வெற்றி மக்கள் பிரதமர் மோடி மீது வைத்துள்ள நம்பிக்கையை பிரதிபலிக்கிறது.

தேர்தலுக்கு முன்னதாக எதிர்க்கட்சிகளை சேர்ந்தவர்கள் பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னோட்டமாக கருதப்படும் இந்த 4 மாநிலத் தேர்தல் செமி பைனல் (அரையிறுதி) ஆட்டம் போன்றது என்று வர்ணித்தனர்.

தற்போது அவர்கள் அரையிறுதியிலேயே தோல்வியடைந்து வெளியேறி விட்டனர்.பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வின் இலக்கு 400 இடங்களில் வெற்றி பெறுவதாகும். அதை இந்த தேர்தல் உறுதி செய்துள்ளது. ராகுல் காந்தியை மக்கள் நிராகரித்து விட்டனர். இவ்வாறு குஷ்பு தெரிவித்தார்.

# அயோத்தி ராமர் கோவிலுக்கு கொண்டு செல்ல தாமிரபரணி புனிதநீர் சேகரிப்பு



**நெல்லை, டிச. 04-**

அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேக விழாவிற்காக திருநெல்வேலி தாமிரபரணியில் இருந்து புனிதநீர் சேகரிக்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

அயோத்தியில் கட்டப்பட்டு வரும் ராமர் கோவில் கும்பாபிஷேகம் 2024-ம் ஆண்டு ஜனவரி 22-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக நாட்டில் உள்ள பல்வேறு நதிகளில் இருந்து புனிதநீர் சேகரித்து கொண்டு செல்லப்படுகிறது.

விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் சார்பில் தென்பொதிகையில் உற்பத்தியாகும் வற்றாத ஜீவநதியான தாமிரபரணியில் இருந்து புனிதநீர் சேகரித்து கொண்டு செல்லப்படுகிறது. இதையொட்டி திருநெல்வேலி சந்திப்பு கைலாசபுரம் தாமிரபரணி தீர்த்தக் கட்டத்தில் நேற்று சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

தாமிரபரணி நதியில் பால், தயிர், மஞ்சள் உள்ளிட்ட சிறப்பு பூஜை பொருள்கள் கலந்து வழிபாடு செய்யப்பட்டது. மகா தீபாராதனைக்குப் பின்பு ஜெய் ஸ்ரீ ராம் முழக்கத்துடன் புனிதநீர் சேகரிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது.

# தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துக்கு மத்திய அரசு விருது
## டெல்லியில் இன்று வழங்கப்படுகிறது

**சென்னை, டிச. 04-**

தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் கீழ் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில் 2023-ம் ஆண்டுக்கான விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம் என்ற விருது வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது,

இந்த அங்கீகாரம், தமிழகத்தில் விளையாட்டு சாம்பியன்களை உருவாக்கி வளர்ப்பதற்கு நமது திராவிட மாடல் அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஒரு சான்றாகும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முயற்சிகளை அங்கீகரித்ததற்காக இந்திய தொழில் கூட்டமைப்புக்கு நன்றி தெரிவிக்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இந்திய தொழில் கூட்டமைப்பின் தொழில் மற்றும் விளையாட்டு துறை சார்ந்த ஸ்கோர் கார்ட் கருத்தரங்கத்தின் 8-வது பதிப்பு டெல்லியில் இன்று (திங்கட்கிழமை) நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம் என்ற விருது வழங்கப்பட உள்ளது.

விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாநிலத்தில் விளையாட்டு வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றுகிறது. குறிப்பாக முக்கிய விளையாட்டு நிகழ்வுகளை நடத்துவதிலும், உள்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும், விளையாட்டு வீரர்களின் நலன் காப்பதிலும் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் முக்கிய பங்கு வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்று முதல் 3 நாட்கள் இந்தியாவில் கென்யா அதிபர் ரூடோ சுற்றுப்பயணம்

**நைரோபி, டிச. 04-**



கென்ய அதிபர் வில்லியம் சாமோய் ரூடோ இன்று முதல் 6-ம் தேதி வரை இந்தியாவில் 3 நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

தென் ஆப்பிரிக்காவின் இந்திய பெருங்கடல் கடற்கரை பகுதியில் உள்ள நாடு, கென்யா. இதன் தலைநகரம் நைரோபி. ஜனாதிபதி திரவுபதி முர்முவின் அழைப்பின் பேரில், கென்யா அதிபர் வில்லியம் சாமோய் ரூடோ இந்தியாவிற்கு இன்று 4-ம் தேதியில் இருந்து 6-ம் தேதி வரை 3-நாள் அரசியல் சுற்றுப்பயணமாக வருகை தர உள்ளார். அதிபருடன் உயர்மட்ட அதிகாரிகள் குழுவும் உடன் வருகை தர உள்ளது.

அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின் அதிபர் வில்லியம் மேற்கொள்ளும் முதல் இந்திய சுற்றுப்பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது. நாளை 5-ம் தேதியன்று அதிபர் வில்லியமிற்கு ராஷ்டிரபதி பவனில் அரசுமுறை உபசரிப்பும், விருந்தும் வழங்கப்பட உள்ளது.

தனது பயணத்தின் ஒரு பகுதியாக பிரதமர் மோடியுடன், வில்லியம் பேச்சு வார்த்தை நடத்த உள்ளார். இந்திய தொழில்துறையில் முதலீடு செய்வது குறித்து டெல்லியில் நடைபெற உள்ள கருத்தரங்கம் ஒன்றில் கலந்து கொள்ளும் வில்லியம், இருநாட்டு உறவுகளை மேம்படுத்துவதற்கான ஒரு முயற்சியாக பார்க்கப்படுகிறது.

வில்லியம், சுமார் 6 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியாவிற்கு வருகை தரும் கென்ய அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக தனது வருகை குறித்து கென்ய அதிபர் வில்லியம், இந்தியாவிற்கும் கென்யாவிற்கும் இடையே சிறப்பான இருதரப்பு உறவு நிலவி வருகிறது. ஜி20 கூட்டமைப்பில் 55 உறுப்பினர் நாடுகளை கொண்ட ஆப்பிரிக்க ஒன்றியத்திற்கு நிரந்தர உறுப்பினர் பதவி வழங்க பிரதமர் மோடி எடுத்த முயற்சிகளுக்கு நாங்கள் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம் என தெரிவித்துள்ளார்.

## தெலுங்கானா சட்டசபை தேர்தலில்
# டெபாசிட் இழந்த நடிகர் பவன் கல்யாணின் கட்சி

**ஐதராபாத், டிச. 04-**

தெலுங்கானா சட்டசபை தேர்தலில் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்திருந்த பிரபல தெலுங்கு நடிகர் பவன் கல்யாணின் ஜன சேனா கட்சி போட்டியிட்ட 8 தொகுதிகளிலுமே டெபாசிட்டை இழந்துள்ளது.

தெலுங்கானாவில் கடந்த 10 ஆண்டுகளாக சந்திரசேகர ராவின் பாரத் ராஷ்டிர சமீதி கட்சியின் ஆட்சி நடந்து வருகிறது. இந்நிலையில் நடந்து முடிந்த அம்மாநில சட்டசபை தேர்தலில் அதிர்ச்சிக்குரிய வகையில் காங்கிரசின் வெற்றியால் பின்னடைவை சந்தித்துள்ளது சந்திரசேகர ராவின் கட்சி. பிரபல தெலுங்கு நடிகர் பவன் கல்யாணின் ஜன சேனா கட்சி இந்த தெலுங்கானா தேர்தலில் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்திருந்தது. தெலுங்கானாவில் ஜன சேனா கட்சிக்கு 8 தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த 8 தொகுதிகளிலுமே ஜன சேனா கட்சி டெபாசிட் இழந்துள்ளது. ஆந்திராவின் ஆளும் ஒய்.எஸ்.ஆர் காங்கிரசின் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டிக்கு எதிராக தொடர்ந்து பேசி வரும் பவன் கல்யாணுக்கு இது பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. அடுத்த ஆண்டு ஆந்திராவில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலிலும் இந்த தோல்வி பிரதிபலிக்குமா என்ற விவாதங்களும் எழுந்துள்ளது.

# மிக்ஜாம் புயல்: நீர்நிலைகளில் செல்பி எடுக்க வேண்டாம்
## வருவாய்த்துறை அமைச்சர் அறிவுறுத்தல்

**சென்னை, டிச. 04-**

மிக்ஜாம் புயல் எதிரொலியாக இன்று வரை பொது மக்கள் அவசியமின்றி வெளியே வரவேண்டாம் எனவும் நீர்நிலைகளில் செல்பி எடுக்க வேண்டாம் எனவும் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை உள்பட தமிழகத்தின் அநேக இடங்களில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்தில், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது,

சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் மழை அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம், தேவையான முன்னேற்ற நடவடிக்கையை எடுத்து வருகிறோம். தேசிய பேரிடர் மீட்பு படையின் 3 குழுக்கள் சென்னையில் தயார் நிலையில் உள்ளது.

பொதுமக்கள் அவசியமின்றி இன்று வரை வெளியே வரவேண்டாம். ஆதார் கார்டு, ரேஷன் கார்டு உள்ளிட்ட ஆவணங்களை பத்திரப்படுத்தி வைக்க வேண்டும். நீர்நிலைகள், முழுவதுமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.

இரவு நேரங்களில் தண்ணீர் திறந்து விடக் கூடாது என்று உத்தரவிட்டு இருப்பதாகவும், நெற்பயிர்கள் சேதம் குறித்து கணக்கீடு வந்திருக்கிறது, மழை முடிந்த பிறகு முழுவதுமாக கணக்கீடு செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். நீர்நிலைகளில் செல்பி எடுக்க வேண்டாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## மிக்ஜாம் புயல் எதிரொலி: பொதுமக்களுக்கு
# குறுஞ்செய்தி மூலம் அலர்ட் விடுத்த பேரிடர் துறை

**சென்னை, டிச. 04-**

மிக்ஜாம் புயல் தொடர்பாக குறுஞ்செய்தி மூலமாக பொது மக்களுக்கு தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை துறை நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவி வந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நேற்று முன்தினம் அதிகாலையில் தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலம் நேற்று மிக்ஜாம் புயலாக உருவாகி உள்ளது.

இதன் எதிரொலியாக, பொதுமக்கள் யாரும் புயல் கரையை கடக்கும் வரை கடற்கரை பகுதிக்கோ, தேவை இல்லாமல் வெளியேவோ செல்ல வேண்டாம் என சென்னை காவல்துறை அறிவித்திருந்தது.

மிக்ஜாம் புயல் தொடர்பாக குறுஞ்செய்தி மூலமாக பொது மக்களுக்கு தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை துறை நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளது. அதன்படி, அந்த குறுஞ்செய்தியில்,

மிக்ஜாம் புயலால் கனமழையுடன் 60- 70 கி.மீ., பலத்த காற்று வீசும் என்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம். கடலோரத்தில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடத்தில் நிவாரண முகாமில் எச்சரிக்கையுடன் இருக்கவும்.பொது மக்கள் தேவை இல்லாமல் வெளியே வர வேண்டாம்.

மரங்கள், மின்கம்பங்கள் சாலைகள் பாதிக்கும். தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பாக இருக்கவும் என்று தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை துறை குறுஞ்செய்தியாக அனுப்பியுள்ளது.

# மிக்ஜாம் புயல்: சென்னை மெரினா கடற்கரை நுழைவாயில் மூடல்

**சென்னை,டிச. 04-**

மிக்ஜாம் புயல் எதிரொலியாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை மெரினா கடற்கரை நுழைவாயில் மூடப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள மிக்ஜாம் புயல் காரணமாக பலத்த காற்று வீசுவதால் பொதுமக்கள் யாரும் மெரினா கடற்கரைக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டிருப்பதோடு, கடற்கரையின் நுழைவாயில் மூடப்பட்டுள்ளது.

மிக்ஜாம் புயலானது நாளை 5-ம் தேதி முற்பகலில் ஆந்திரா கடற்கரையை நெல்லூருக்கும் மசூலிப்பட்டினத்துக்கும் இடையே தீவிர புயலாக கடக்கக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், பலத்த காற்று வீசுவதாலும், பொதுமக்கள் வேடிக்கை பார்க்க கடற்கரைக்கு வருவார்கள் என்பதாலும் முன்னெச்சரிக்கையாக மெரினா கடற்கரையின் நுழைவாயில் தடுப்புகள் அமைத்து மூடப்பட்டுள்ளது. மக்கள் யாரும் கடற்கரைக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

மரம் மனிதனின் உரம்

# உங்கள் நட்சத்திர பலன்கள்

( 04.12.2023 முதல் 09.12.2023 வரை )

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்— கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு கிடைக்கும். காரியத் தடைகள், சுறுசுறுப்பு இல்லாத நிலை உருவாகும். பக்தி, ஞானம் மேலிடும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் உங்கள் புகழும் மரியாதையும் கூடும். பயணத்தில் மகிழ்ச்சி நிலவும். நல்ல நண்பர்கள் மற்றும் உறவினர் அனுசரணை இருக்கும். அரசு வகை இலாபங்கள் ஏற்படும். விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டங்கள் ஏற்பட்டு, வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். சிலருக்கு புத்திர பாக்கியம், புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படும். குடும்பத்தில் மன அமைதி பெற வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. நறுமணப் பொருட்கள் மற்றும் நவநாகரீக வீட்டு உபயோகப் பொருட்கள் வியாபாரம் சூடுபிடிக்கும்.

பரணி --

இந்த வாரம் உங்களுக்கு கல்வியில் வெற்றி கிடைக்கும். உயர் அதிகாரிகளின் உதவி மற்றும் ஒத்துழைப்பு கிடைக்கும். பயணங்களில் எச்சரிக்கை தேவை. சிலருக்குப் தொழிலில் பண முடக்கம் ஏற்படலாம். பட்டம், பதவிகள் ஆகியவை கிடைக்கும். தாயின் மூலம் இலாபம் ஏற்படலாம். கற்பனை வளம் பெருகும். போட்டி பந்தயங்கள் அரசு வகை இலாபம், வீட்டில் சுபகாரியங்கள், வெளியிடங்களில் வெற்றிக்கான பாராட்டுக்கள் ஆகியவை ஏற்படும். தம்பதிகளுக்கு இடையே அன்பு மிகுந்து ஒருவருக்கொருவர் அனுசரித்து பேரின்பம் அடைவர். தீயகுணம் உடைய நண்பர்களை ஒதுக்குவது நல்லது. குழந்தைகளின் முன்னேற்றம் கண்டு மனம் மகிழ்ச்சி அடையும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் தொலைதூர சுபச் செய்திகள் கேட்டு மனம் மகிழும். பலரும் வியக்கும் வண்ணம் பற்பல சாதனைகளைப் புரிந்து பாராட்டு பெறுவீர்கள். வியாபாரத்தில் புதிய தொடர்புகள் ஏற்பட்டு முன்னேற்றத்துக்கான வழிகள் பிறக்கும். அரசு வகையில் கட்ட வேண்டிய தீர்வுகள், வரி பாக்கிகள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கு தேவையான பணவரவுகள், பணவுதவி கள் வந்து சேரும். தரும காரியங்கள் மற்றும் தெய்வ வழிபாடு ஆகியவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளுடன் வீண் விவாதங்களை தவிர்த்து முன்னேற்றம் அடைய முற்படுவது நல்லது. மனதுக்குப் பிரியமான மனைவியிடம் அன்பு பாராட்டி, அமைதியாக இருந்தால் ஆனந்தம் பெருகும்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4- பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு உண்டு. வெளியூர் அலைச்சல்கள் அதிகரிக்கும். ஞானிகளின், பெரியவர்கள் சந்திப்பால் மன அமைதியும், சந்தோஷமும் பெருகும். சிலருக்கு எடுத்த முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். விருந்தினர் வருகையால் வீட்டில் கும்மாளமும், குஷியாகவும் இருக்கும். உங்கள் கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தந்தை வழி உறவுகளால் வீண் செலவுகள் அதிகரிக்கும். பெண்களுக்கு அழகிய ஆடை ஆபரண சேர்க்கை ஏற்படும். சிலருக்கு வீடு, தொழில் அல்லது இடமாற்றம் ஏற்படலாம்.

ரோகிணி –

இந்த வாரம் தனலாபம் எதிர்பார்க்கலாம். பிறரின் உதவியை நாட வேண்டிய சூழ்நிலை எழலாம். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் எடுப்பதை ஒரு சில நாட்களுக்குத் தள்ளிப் போடுவது நல்லது. அடிக்கடி அலைச்சல்கள் ஏற்படலாம். தூய ஆடைகளை அணிந்து மிடுக்காக, நல்ல காரியங்கள் செய்து நல்லவர் என அனைவரின் பாராட்டுதல்களையும் பெறுவர். சிலர் வீண் வார்த்தைகள் பேசுவதன் மூலம் வேண்டாத பகையை தேடிக் கொள்வார். அரசு மூலம் எதிர்பார்த்த ஆதாயங்கள் எளிதாகக் கிடைக்கும். கேளிக்கை ஈடுபாடு, இனியது புசித்தல் மற்றும் ஸ்த்ரீ சுகம் என பொழுது இனிமையாக கழியும். சிலருக்குத் தொடர் பணியின் காரணமாக வேளைக்கு உணவருந்தாமல் நிலை ஏற்படும்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு, புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். ஆசிரியர்களின் ஆலோசனைப்படி ஆழ்ந்து படிப்பது காரணமாக அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள். சிலருக்கு வாழ்க்கையில் புதுப்புது மாற்றங்கள் ஏற்படலாம். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் உங்கள் எதிர்பார்ப்புக்கும் மேலாக பல வழிகளிலும் பணவரவு அதிகரிக்கும். சிலருக்கு நல்ல ஆன்மிக குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படுத்துவார். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். சிலருக்குத் திருமண ஏற்பாடுகள் நடைபெறலாம்.

## மிதுனம்

(மிருகசீரிடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் உங்கள் அசாத்தியத் திறமைகளை வெளிக் காட்டுவதன் மூலம் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நல்ல சேதிகள் நாடிவரும். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான தகவல்கள் வந்து சேரும். வாரத்தின், முதல் நாள் பயணத்தில் துன்பமும், பின்னர் வரும் நாட்களில் கடன் கொடுத்தவர்களின் நெருக்கடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, அதியவை ஏற்படும். எனவே இன்பம் வரும் போது மகிழ்ச்சியில் பொங்குவதும், துன்பம் வரும் போது துவளுவது தானே வாழ்க்கை. இரண்டையும் சமமாக பாவித்தல் துன்பமும் இன்பமாகும்.

திருவாதிரை —

இந்த வாரம் உங்களுக்கு பணம் சம்பாதிப்பதில் ஆர்வம் அதிகரிக்கும். அதன் காரணமாக அதிகம் உழைப்பீர்கள். அரசியல் செய்பவர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு ஓங்கும். அறிவுத் திறனும் கூடும். சிலர் பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. இனிய புதிய நண்பர்களிடம் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் தேர்ச்சி உண்டு. சிலருக்குக் பிரிவும், பகையும் ஏற்படலாம். தொலைதூர செய்திகளால் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். புதிய வாகன யோகம் ஏற்படலாம். யாத்திரையும், வெளிநாட்டுப் பயணங்களும் ஏற்படும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் உங்களுக்கு தந்தையால் நன்மைகள் பல ஏற்படும். மகான்களின் தரிசனம் கிட்டும். புதிய முயற்சிகள் மேற்கொள்ளும் போது அது விஷயமாக பயணங்கள் செல்லும் நிலை ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்குப் புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். பெண்களுக்கு வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். வாக்கு வன்மையால் வருமானம் பெருகும். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் பெறுவதில் எவ்விதச் சிக்கல்களும் ஏற்படாது.

## கடகம்

(புனர்பூசம்-4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் எதிர்பாராத இனிய விருந்துகள், மகிழ்ச்சி கொண்டாட்டங்கள் ஏற்படும். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். அரசாங்கத்திடம் வேண்டப்பட்ட கோரிக்கைகள் தடங்கலின்றி நிறைவேறும். நல்லோர் சேர்க்கையால் நல்லதே நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் நல்ல தேர்ச்சி ஏற்படும். சிலருக்கு உழைப்புக் குறைவானாலும் ஆதாயம் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு சிலர் மேன்மை அடைவீர்கள். எப்போதாவது வரும் கோபத்தை அடக்குவது நல்லது. சிலருக்குத் தொழிலில் புதிய வாடிக்கையாளர்கள் மூலம் அதிகமான வருவாய் பெருக்கம் ஏற்படும்.

பூசம் –

இந்த வாரம் திருமணம் போன்ற சுப காரியங்களுக்கு செலவுகள் ஏற்படும். புதுப்புது முயற்சிகளால் செல்வ நிலை உயரும். வியாபாரிகள் வாடிக்கையாளரிடம் மிகுந்த நட்பு பாராட்ட அதிக இலாபம் சம்பாதிப்பர். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு ஆதாயம் ஏற்படும். துணிவுடன் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். சிலருக்கு அவ்வப்போது சிறு காரியத் தடைகள் ஏற்படலாம். தூக்கமின்மையால், சுறுசுறுப்பற்ற நிலை ஏற்படும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. வாக்கு வன்மையால் வருமானம் பெருகும். சில மாணவர்கள் கல்வியில் உயர்நிலை எய்துவர். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும்.

ஆயில்யம் –

இந்த வாரம் மனைவியின் அன்பால் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். பெரியோரின் ஆதரவும் உதவியும் கிடைக்கும். அதன் காரணமாக உங்கள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். தொழில் அபிவிருத்திக்காக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். வீட்டுக்குத் தேவை என்று விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். புதிய ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் தொடங்க அரசுக் கடன்கள் தடையின்றி கிடைக்கும். புத்தக அச்சு மற்றும் வெளியீடு சம்பந்தமான தொழில்கள் வங்கிக் கடன் உதவியுடன் வெற்றி பெறும். சிலருக்கு உயர் ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் இரண்டும் கலந்த வாரம். ஞானிகளின் உபதேசம் கேட்டு மனம் ஞானத் தன்மைக்கு மாறும். அரசுப் பெண் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீண் கோபத்தால் விவேகத்தை இழக்காதீர்கள். உங்கள் சிறப்பான, திறமை மிக்க பணி அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டு, பாராட்டும் பெறும். மேடைப் பேச்சாளர்களில் சிலருக்கு மேன்மையான நிலை ஏற்படும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு புதிய முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும்.

பூரம் –

இந்த வாரம் உங்களுக்கு எதிர்பார்த்த அளவு தனவரவு உண்டு. உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி ஏற்படும். தெய்வ சிந்தனையாலும், தரும சிந்தனையாலும் மனதில் அமைதி நிலவும். தொழில் வாய்ப்புகள் பெருகும். உடன் பணிபுரியும் பணியாளர்களின் பொறுப்பு மிக்க பணியால் உற்பத்தி பெருகும். பங்குச் சந்தை மூலம் பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு ஏற்றமிகு வாரம். சிலருக்குப் பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சிலர் பலவகையிலும் பிறர் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் முதல் நாளும், 4, 5 மற்றும் 6 நாட்களும் உங்களுக்கு சிறப்பான பலன்களைத் தரும். எதிர்பாராத தனவரவு மனம் மகிழும். ஆறுவது சினம் என சினத்தை அடக்கினால் சிரமங்கள் குறையும். போட்டி, பொறாமைகளை அகற்றி தன்னம்பிக்கையோடு செயல்பட்டால் முன்னேற்றங்கள் சுலபமாகும். திடீரப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். சிலர் பழைய கடன்களை அடைத்து புதிய கடன்கள் வாங்க முயல்வீர்கள். உயர் அதிகாரிகளின் உந்துதலால் ஏற்படும், இடைவிடாத பணி காரணமாக நேரத்திற்கு உணவு உண்ண இயலாமல் போகும். புதிய வியாபாரத் திட்டங்கள் வெற்றி பெறுவதோடு, நல்ல காலம் கனிந்து வரும். அரசு அதிகாரிகள் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிறப்பான காலம். அதன் காரணமாக வங்கி சேமிப்புக் கணக்குகளில் இருக்கும் கையிருப்பு பணம் அதிகரிக்கும். பங்குச் சந்தை ஈடுபாடு இலாபம் பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை. புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். மேல்மட்ட அதிகாரிகளின் ஆதரவும், புதிய தொடர்புகள் நன்மையும் ஏற்படும்.

அஸ்தம் –

இந்த வாரம் எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும். மந்திர சித்தி செய்யும் காரியங்களில் வெற்றி கிட்டும். பெரிய மனிதர்களின் மற்றும் பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். தன வருமானம் அதிகரித்தால் அனைத்துக் காரியங்களும் அனுகூலமாக இருக்கும். கேளிக்கை விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப்பெரிய சாகசங்கள் புரிவீர்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். குழந்தைகளின் செயல்கள், சில நேரங்களில் அவமானப்படும் நிலை ஏற்படும்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். உங்கள் பணி கண்டு மற்றவர்களின் பாராட்டை கேட்டு மகிழ்வார்கள். சிலருக்கு மற்றவர்களை ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு இனி நல்ல காலம் பிறக்கும். மாணவர்கள் தங்கள் கிரகிப்பு தன்மையை கல்வியின் தரத்தை உயர்த்தி கொள்வர். விற்பனைப் பிரதிநிதிகளின் வருமானம் உங்கள் பேச்சுத் திறன் அதிகரிக்கும். குடும்ப வாழ்க்கையில் சந்தோஷம் நிலைத்திருக்கும். பணிபுரியும் பெண்களுக்குத் உங்கள் நிறுவனத்தில் சம்பள உயர்வு கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும்விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும். பழைய கடன்கள் விரைவில் வசூலாகும். எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். உங்கள் சகோதரனின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும் பெண்களால் இலாபம் ஏற்படும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் ஆகியவற்றால் வரும் இன்பம் நிலைத்திருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் நீங்கள் எதிர்பார்த்த இலக்கை எட்டிவிடுவீர்கள்.

சுவாதி –

இந்த வாரம் உங்கள் சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்களுக்கு அனுகூலமான பதில்கள் வரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பெண்களுக்கு பணியிடத்தில் மற்றவர்களின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் செலவுகள் அதிகமாகும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு எப்போதும் உங்கள் பையை பணத்தால் நிரப்பும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தார் மூலம் உதவிகள் தடைப்படாது. எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். புதிய பெண்களிடம் பேசும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் பேசவும். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபடுவது, இழப்பை தவிர்க்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் இந்த வாரம் மேற்கொள்ளப்படும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளுக்கு நல்ல உயர்வான முன்னேற்றங்கள் ஏற்படும்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் சுக சௌகரியங்கள் சேரும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். புதுத்தெம்பும், உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். சிலருக்கு அதிகாரப் பதவிகள் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து சேரும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய நிலை ஏற்படும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைக்க வேண்டியது வரும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பெண்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்

அனுஷம் –

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தார் மூலம் உதவிகள் தடைப்படாது. உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபடுவது, இழப்பை தவிர்க்கும் எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்கள் அடைவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும்.

கேட்டை –

இந்த வாரம் உங்களுக்கு உழைப்பு அதிகமாகி. அதற்கேற்ற இலாபமோ, பலன் கிடைக்காது. ஆரோக்கியக் குறைவும் ஏற்படலாம். முன்னெச்சரிக்கையாக மருத்துவ பரிசோதனைகள் செய்து கொள்வது நல்லது. உங்கள் செயல்திறன் அதிகரிகரித்துச் செல்வாக்கும் பெருகும். புதுத்தெம்பும், உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். சிலருக்கு அதிகாரமுள்ள உயர் பதவி கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். பயணங்களிலும் எச்சரிக்கை தேவை.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் பொன் ஆபரணங்கள் விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியமும், புதுத் தெம்பும், புத்தொளியும் ஏற்படும். பணக்கார மனைவியும் அமைவாள். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும்.

பூராடம் –

இந்த வாரம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றி கிடைக்கும்.உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் அனைத்துச் செயல்களும் வெற்றி பெறும். ஆனால், தொழில் விஷயமாக எடுக்கும் முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக முயற்சிகள் தேவைப்படும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். அரசு பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் பல வழிகளிலும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் உங்கள் அனுசரணையாக சீர்படும். சிறந்த எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். அன்பான உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், அதிகச் செலவுகளும் ஏற்படும். உங்கள் சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4- பாதங்கள், திருவோ ணம்- 1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். பக்தி மிக்க புண்ணிய தல யாத்திரைகள் ஏற்படும். மேம்படும் பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேற்றுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடுவதால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். பூமி, வீடு ஆகியவற்றின் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும்.

திருவோணம்-

இந்த வாரம் உங்கள் மூலதனத்தைக் கொண்டு புதிய முதலீட்டுத் திட்டங்களை செயல்படுத்த முற்படுவீர்கள். நீண்ட நாட்களாக வருவார்கள் என எதிர்பார்த்த நெருங்கிய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்காது. பெண்கள் தாங்கள் பணிபுரியும் இடங்களில் உங்கள் திறமைகளை நிலைநாட்டி புகழ் பெறுவர். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு கடின உழைப்பு தேவைப்படும். வீட்டில் நவீன உபகரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும். இதுவரை கடினமாக இருந்த காரியங்கள் கூட எளிதில் கைகூடும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் தாராளமான தன வரவு வரும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். உயர் அதிகாரிகளின் சொல் கேட்டு நடப்பது முன்னேற்றத்தை அளிக்கும். வியாபாரிகள் வாடிக்கையாளர்களுக்கு இலவச பரிசுகள் கொடுத்து நீங்கள் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வர். பிரிந்த தம்பதிகள் இணைந்து மகிழ்வர். எதிரிகளின் திட்டங்களை சமயோஜிதமாக செயல்பட்டு முறியடிப்பீர்கள். குடும்பத்தில் சுப காரியங்களுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடக்கும். புத்திரர்களால் ஜெயமுண்டு. நவீன காலத்துக்கு ஏற்றபடி புதுப்புது சாமான்களை அறிமுகப்படுத்தி வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள். அரசுப் பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிந்து, அதிகாரிகள் பாராட்டுதல்களை பெறுவார்கள்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் உங்கள் பணவரவு அதிகரிக்கும். புதிய முதலீட்டுத் திட்டங்களில் உங்கள் பணத்தை முதலீடு செய்து தொழிலை விருத்தி செய்வார்கள். நீண்ட நாட்களாக வராத விருந்தினர்கள் வந்து விருந்தாடி மகிழ்வைத் தருவர்.. நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். பயணங்கள் இனிமை தரும். சினிமா, டிராமா எனப் பொழுதுபோக்குகளில் குடும்பத்தோடு ஈடுபட்டு மகிழ்வீர்கள். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்காது. வீட்டில் நவீன உபகரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும். இதுவரை கடினமாக இருந்த காரியங்கள் கூட எளிதில் கைகூடும்.

சதயம்-

இந்த வாரம் குடும்பத்தோடு குதூகலமாக இருக்கப் போகும் குஷியான வாரம். அரசுப் பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்கள் விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் கிடைக்கும். உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் தொல்லை குறையும். அரசு பணிபுரியும் பெண்களுக்கு உயர் அதிகாரிகளின் தயவால் பணியில் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்கும். அனைத்து முயற்சிகளிலும் அவர்கள் வெற்றியும் பெறுவார்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்களின் தேர்வு முடிவுகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் பணவரவு அதிகரிப்பதால் மனக்களிப்பு கூடும் வாரம். உங்கள் புதிய முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். புனித பயணங்கள் மேற்கொள்வீர்கள். எல்லோருடனும் பழகும் உங்கள் சகஜமான குணத்தால் விஐபி களின் நட்பு உருவாகும். அவர்கள் மூலமாக ஆதாயங்கள் பெறும் நிலையும் ஏற்படும். சந்தோஷங்கள் நிலவும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண ஏற்பாடுகள் நடக்கும். தொடுத்த வழக்குகள் வெல்லும். உயர் பதவிகளுக்கான வாய்ப்புகள் பெருகும். தாய் வழியில் ஆதாயம் உண்டு. பால் வளம் பெருகும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே நடத்தி முடிப்பீர்கள். அதிகாரம் பண்ணும் தலை பதவி கிடைக்கும். பலவகைப் பயணங்களும் அதனால் இலாபமும் ஏற்படும்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் குடும்பத்தில் கலகங்களும், குழப்பங்களும் நிகழலாம். ஓய்வெடுத்து, உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லையே. அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. பல நாள் கனவுகள் நனவாகும். பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் ஆடம்பர செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. சிலருக்குப் பிறர் பொல்லாப்பு காரணமாக பயம் தோன்றலாம். தெய்வபலம் இருப்பதால் நேர்மை மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றால், வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அடைவீர்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சியை அனுபவிப்பீர்கள்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் கல்வி கேள்விகளில் தேர்ச்சி ஏற்படும். சுபச் செய்திகள் மனமகிழ்ச்சி தரும். தனவரவு அதிகமாவதால் தான தருமங்கள் ஈடுபாடு ஏற்படும். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களால் அதிக இலாபம் அடைவர். உங்கள் இல்லத்தில் மிக மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்கள் தூள் பரத்தும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அடைவீர்கள். மாணவர்கள் கருத்தோடு படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். பெண்கள் மூலம் சந்தோஷம் இருக்கும். வாகனங்களில் செல்லும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் செல்லவும். நல்ல நண்பர்களுடன் பழகுவது நல்லது. தீய குணமுள்ள நண்பர்களைத் தவிர்க்கவும். உங்கள் மனம் உயர்ந்த எண்ணங்களை கொண்டதாக அமையும்.

ரேவதி-

இந்த வாரம் உறவுகள், உள்ளங்கவர் நண்பர்கள் மற்றும் மங்கையர்கள் ஆகியோர் உதவிக்கரம் நீட்டுவதால் உள்ளம் மகிழும். பணவரவு அதிகரிப்பது போல், செலவுகளும் கூடும். மால் போன்ற இடங்களில் மனதுக்கு இனிய வர்களுடன் சுற்றி, உணவகத்தில் இனியதாய் புசிப்பீர்கள். சிலருக்குப் பொருள் சேதமும், புதிய கடன்கள் ஏற்படும். அதிகாரிகளிடம் அடங்கி நடப்பது நல்லது. பெரியவர்கள் பேட்டியும், ஞானிகள் தரிசனம் கிடைக்கும். பல சாதனைகள் புரிவார்கள். பிறருடன் வீண் மனஸ்தாபங்கள் தவிர்க்கவும். வியாபார விரிவாக்கம் பற்றி உங்கள் கூட்டாளியின் ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளத் தக்கதாகவும், சிறப்பானதாகவும் இருக்கும்.



தென்காசி சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்த மழை காரணமாக அனைத்து அருவிகளிலும் தண்ணீர் கொட்டுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள், ஐயப்ப பக்தர்கள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

# மயிலாடுதுறையில் பிரசித்தி பெற்ற புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய ஆண்டு திருவிழா அலங்கார தேர்பவனி

## திருப்பலியில் திரளானோர் பங்கேற்பு



**மயிலாடுதுறை,டிச.04-**

மயிலாடுதுறையில் பிரசித்தி பெற்ற புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய பங்குத் திருவிழா கடந்த நவம்பர் 23-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து பத்து நாட்கள் மன்றாட்டு மாலை, நவநாள் ஜெபம், திருப்பலி உள்ளிட்ட பல்வேறு வழிபாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

விழாவின் முக்கிய நிகழ்வான சிறப்பு திருப்பலி மற்றும் திருத்தேர்பவனி நடைபெற்றது. மயிலாடுதுறை மறைவட்டஅதிபர் பேரருட் தார்சிஸ் ராஜ் அடிகளார் தலைமையில், உதவி பங்குதந்தை மைக்கில் டைசன் அடிகளார், சீர்காழி பங்குதந்தை டேனியேல் அடிகளார், கூறைநாடு பங்குதந்தை ஜான் பிரிட்டோ அடிகளார், எருக்கூர் நிர்வாகி பங்குதந்தை ஆரோக்கியசாமி அடிகளார், மணல்மேடு பங்குதந்தை ஆனந்த் அடிகளார் ஆகியோர் இணைந்து நிறைவேற்றிய திருப்பலியில் "இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாக கருதாதோர் நிலை வாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர்" என்ற இறைவார்த்தையை மையப்படுத்தி, பாளையங்கோட்டை மறைவட்ட அதிபர் பேரருட் அகஸ்டின் அடிகளார் மறையுரையாற்றினார். இந்த சிறப்பு திருப்பலியில் உலக அமைதிக்காகவும், இயற்கை சீற்றங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்படவும், விவசாயம் செழிக்கவும், சமத்துவம், சகோதரத்துவம் நிலைத்திடவும் வேண்டி சிறப்பு பிரார்த்தனை வழிபாடுகள் நடைபெற்றன.

தொடர்ந்து, புனித சவேரியாரின் திருஉருவம் தாங்கிய அலங்கார தேர்பவனி நடைபெற்றது. ஆலய வளாகத்தில் இன்னிசை முழங்க, வானவேடிக்கையுடன் தொடங்கிய தேர்பவனி அரசு மருத்துவமனை சாலை, காந்திஜி சாலை உள்ளிட்ட வீதிகள் வழியாக மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது. திருப்பலி மற்றும் தேர்பவனி நிகழ்வுகளில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அன்பிய குழுவினர், மரியாயின் சேனையினர், பாடகற்குழுவினர், வின்சென்ட் தே பவுல் சபையினர், இளையோர் இயக்கத்தினர், பங்கு மக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். கொடியேற்றத்துடன் தொடங்கி பத்து நாட்கள் நடைபெற்ற திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவு பெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை மறைவட்ட அதிபர் பேரருட்தார்சிஸ் ராஜ் அடிகளார் தலைமையில் விழாக்குழுவினர் செய்திருந்தனர்.



சென்னையில்1000பழமரக்கன்றுகள்நடும்சுற்றுச்சூழல்விழாநடைபெற்றது.இந்தநிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் திட்டக்குழு உறுப்பினரும், சித்த மருத்துவருமான கு.சிவராமன் கிரீன் நீடா சுற்றுச்சூழலமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மு.ராஜவேலு பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ராயப்பேட்டை பகுதியில்

# மழை நீருடன் கழிவு நீரும் கலந்து சாலையில் ஓடுவதால் தொற்றுநோய் பரவும் ஆபத்து

## முன்னாள் கவுன்சிலர் குற்றச்சாட்டு

**சென்னை டிச 04-**

ராயப்பேட்டையில் பெய்த கனமழை காரணமாக மழை நீருடன் கழிவு நீரும் கலந்து சாலையில் ஓடுவதால் தொற்றுநோய் பரவும் ஆபத்து இருப்பதாக பொதுமக்கள்

பலமுறை புகார் கொடுத்தும் தேங்கியுள்ள நீரை அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை எனமுன்னாள் கவுன்சிலர் டிசிவராஜ் புகார் தெரிவித்துள்ளார். சென்னையில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக சென்னையில் உள்ள பல்வேறு இடங்களில் மழை நீர் சாலைகளில் குளம் போல் தேங்கியுள்ளது

தேங்கியுள்ள மழை நீரால் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாமல் தங்களது இயல்பு வாழ்க்கை இழந்துள்ளனர்.

சென்னை ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 118 வது வார்டில் உள்ள ராயப்பேட்டையில் உள்ள பொன்னுசாமி தெரு ,வடக்கு கோபாலபுரம், கணபதி காலனி, உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நேற்று முன் தினம் இரவு முதல் பெய்த மழையின் காரணமாக மழை நீர் வடியாமல் தெருக்களில் தேங்கி நிற்கிறது அந்தப் பகுதிகள் போடப்பட்டுள்ள மழை நீர் வடிகால் கால்வாய்கள் பயன்படாமல் தெருக்களில் குளம் போல் தேங்கி நிற்கிறது

மேலும் பொன்னுசாமி தெருவில் முழங்கால் அளவிற்கு மழை நீர் தேங்கியுள்ளதுடன் அந்தப் பகுதி முழுவதும் கழிவுநீர் அடைப்பு ஏற்பட்டு சாலைகளில் கழிவு நீர் ஆறாக ஓடுகிறது

மழை நீருடன் கழுநீர் கலந்து சாலைகளில் இருப்பதால் துர்நாற்றம் வீசுவது உடன் தொற்றுநோய் பரவும் ஆபத்து இருப்பதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர் பலமுறை புகார் கொடுத்தும் திமுக கவுன்சிலர் மற்றும் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மாநகராட்சி ஊழியர்கள் யாரும் இந்த பகுதிக்கு வரவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்

உடனடியாக தேங்கியுள்ள மழை நீர் மற்றும் கழிவுநீர் அடைப்பை சரி செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# ஊட்டி செயின்ட் மேரிஸ் ஆலயத்தில் கிறிஸ்துமஸ் சீசன் துவக்கம்



**ஊட்டி, டிச.04-**

உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் சீசன் துவங்கியது. அதனையடுத்து ஊட்டியில் அனைத்து ஆலயங்களிலும் கிறிஸ்துமஸ் கேண்டில் ஏற்றிவைத்து கிறிஸ்துமஸ் வழிபாடுகள் தயாரிப்பு கொண்டாட்டங்கள் துவங்கியுள்ளன.

ஊட்டி செயின்ட் மேரிஸ் ஆலயத்தில் காலை ஆறு மணிக்கு உதவி பங்கு குரு பிரெட்ரிக் கிறிஸ்துமஸ் தயாரிப்பு நாட்களை துவக்கி வைக்கும் பாரம்பரியத்தை ஊதா கேண்டில் ஏற்றிவைத்து துவக்கிவைத்தார். வருகிற நான்கு வாரங்கள் நான்கு கேண்டில் ஏற்றிவைத்து ஏசுவின் பிறப்பு நிகழ்வை அர்த்தமுள்ளதாக அறிவிக்க படுகிறது . முதல் வார கேண்டில் ஏசுவின் பிறப்பு உலகத்திற்கு நம்பிக்கையை உணர்த்துகிறது. இரண்டாவது ஞாயிற்று கிழமை கேண்டில் ஏசுவின் பிறப்பு அமைதியை ஏற்படுத்துகிறது. மூன்றாவது ஞாயிற்று கிழமை கேண்டில் ஏசுவின் பிறப்பு உலகத்திற்கு மகிழ்ச்சியை கொடுக்கிறது. நான்காவது ஞாயிற்று கிழமை கேண்டில் ஏசுவின் பிறப்பு உலகம் முழுவதும் அன்பை பொழிகிறது என்பதை தெரியப்படுத்துகிறது . அதற்கு பின் டிசம்பர் 24 ஆம் தேதி நள்ளிரவு ஏசுவின் பிறப்பு விழா கொண்டாடப்படுகிறது . இந்த சிறப்பான தயாரிப்பு முதல் ஞாயிற்று கிழமை துவங்க கிறிஸ்துமஸ் கரோல் பாடல்கள் பாடுவது கிறிஸ்துமஸ் தாத்தா வருகை மற்றும் கிறிஸ்துமஸ் குடில் மரம் ஜோடனை என்று களைகட்டும்.

# ஊட்டியில் மலைச்சாரல் கவியரங்கம்



**ஊட்டி, டிச.04-**

ஊட்டியில் 506-வது மலைச்சாரல் கவியரங்கில் பள்ளி மாணவக் கவிஞனுக்கு நூல் பரிசாக வழங்கப்பட்டது.

மாறிடும் வானிலையில் நீலகிரி மாவட்ட மலைச்சாரல் 506வது கவியரங்கம் கவிஞர் ஜனார்தனன் பாடிய மகாகவி பாரதியின் பாடலுடன் அரங்கேறியது.செயலர் ம.பிரபு தலைமையேற்க தலைவர் கே எம் பௌ;ளி முன்னிலையில் கவிஞர்கள் மாரியப்பன், பாலகிருஷ்ணன் சுந்தரபாண்டியன,;வாசமல்லி, அர்சினி நஸ்மன்பூ ஆகியோர் பங்கேற்க ஊட்டி புனித சூசையப்பர் பள்ளி மாணவக் கவிஞர் ரிஷிகேஷ் கவிதை பாட மன்றம் சார்பாக அவருக்கு நூலொன்று நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. நாட்டுப் பண் நன்றியுரை நவில நிகழ்வு நிறைவுப் பெற்றது. கவிஞர் நீலமலை ஜே பி நன்றியுரை ஆற்றினார்



விருகம்பாக்கம் தொகுதிக்கு உட்பட்ட 138 வது வார்டு பாரதி தாசன் காலனி பகுதியில் சாலையில் தேங்கியிருந்த மழை நீரை மின் மோட்டார் மூலம் அகற்றும் பணியில் மாநகராட்சி ஊழியர்களுடன் மாமன்ற உறுப்பினர் கே.கண்ணன் ஈடுபட்டார்.



வளசரவாக்கம் மண்டலம் 151 வது வார்டு தொடர் மழையினால் சாலையில் தேங்கிய மழைநீரை மின்மோட்டார் மூலம் வெளியேற்றம் பணியை மாமன்ற உறுப்பினர் ச.சங்கர் கணேஷ் பார்வையிட்டார்.



வளசரவாக்கம் மண்டலம் 145 வது வார்டு நெற்குன்றம் ஏரிக்கரை தெருவில் முன்னாள் அமைச்சர் பா.பென்ஜமின் தலைமையில் சாலையில் தேங்கியிருந்த மழைநீரை அதிமுகவினர் அகற்றினர்.உடன் பகுதி செயலாளர் மாநகராட்சி எதிர்கட்சிதுணை தலைவர் டி.சத்தியநாதன், வட்ட செயலாளர்கள் ஏ.பாரத், எம்.பாரதி மற்றும் பலர் உள்ளனர்.



சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு சென்னை திருவொற்றியூர் கிழக்கு பகுதி திமுக அலுவலகத்தில் பகுதி செயலாளர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் மனசாட்சி அமைப்பை சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி,எண்ணை, பருப்பு, மற்றும் வேட்டி சேலை போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்கினர். அருகில் திமுக பகுதி நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை திருவொற்றியூர் மண்டலம் 7வது வட்டத்தில் தொடர் மழை வெள்ளம் சூழ்ந்துள்ள வெற்றி விநாயகர் நகர், பெரியார் நகர் அண்ணா நகர் மற்றும் காந்திநகரில் வசிக்கும் மக்களுக்கு உணவு பொருட்களை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.குப்பன் வழங்கினார். அவருடன் அதிமுக வட்ட செயலாளர்கள் கண்ணன், ரவி, ஸ்டீபன் உட்பட பலர் உடனிருந்தனர்.

# ஊத்துக்கோட்டையில் அதிமுக பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம்



**ஊத்துக்கோட்டை, டிச-04.**

ஊத்துக்கோட்டையில் அதிமுக பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட ஒரு தனியார் மண்டபத்தில் பூண்டி கிழக்கு ஒன்றியம் மற்றும் ஊத்துக்கோட்டை பேரூராட்சி அதிமுக சார்பாக இளைஞர் பாசறை மற்றும் இளம்பெண்கள் பாசறை, மகளிர் அமைப்புகள், பூத் கமிட்டி அமைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் திருவள்ளூர் வடக்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினருமான சிறுணியம் பி.பலராமன் தலைமையில் நடைபெற்றது. இதில் முன்னாள் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட அம்மா பேரவை செயலாளருமான கே.எஸ்.விஜயகுமார், மாவட்ட பொருளாளரும் பூண்டி ஒன்றிய குழு பெருந்தலைவர் வெங்கட்ரமணா, பூண்டி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எம்.பிரசாத், ஊத்துக்கோட்டை பேரூராட்சி செயலாளர் ஷேக் தாவூத், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த கூட்டத்தில் பூண்டி கிழக்கு ஒன்றிய அம்மா பேரவை இணை செயலாளர் ஆர். சென்சய்யா, திருவள்ளூர் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர் ஏ.வேல்முருகன், பூண்டி கிழக்கு ஒன்றிய இளைஞரணி செயலாளர் மதன்குமார், பூண்டி கிழக்கு ஒன்றிய தகவல் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் உத்தர குமார், திருவள்ளூர் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் பிரிவு எல்.எம்.சுரேஷ், வேலு, ஜீவா, பூண்டி கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி இணை செயலாளர் விஜயகுமார் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## அண்ணாநகர் மண்டல பகுதிகளில்

# கால்வாய் தூர்வாரும் பணி தீவிரம்: குடிநீர் வாரியம் நடவடிக்கை

**சென்னை டிச 04**

சென்னை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கன மழை தொடர்ந்து பெய்து வருவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அண்ணாநகர், வில்லிவாக்கம், அயனாவரம், அமைந்தகரை, ருடி.பி.சத்திரம், திருமங்கலம் ஆகிய பகுதியில் அண்ணாநகர் மண்டல குடிநீர் வாரிய பகுதி பொறியாளர் ஜெயபிரகாஷ் மற்றும் துணை பகுதி பொறியாளர் சுரேஷ்குமார் ஆகியோர் தலைமையில் குடிநீர் வாரிய ஊழியர்கள், கால்வாய்களை தூர்வாரும் பணியை தீவிரம் படுத்தி வருகின்றனர்.அதேபோல், குழாயில் குடிநீர் சுத்தமாக வருகிறதா, குடிநீர் தட்டுபாடு இல்லாமல் வருகிறதா என்று குடிநீர் வாரிய அதிகாரிகள் தினமும் ஆய்வு செய்து பொதுமக்களிடம் குறைகள் ஏதும் உள்ளதா என கேட்டறிந்து வருகின்றனர்.

குறைகள் இருந்தால் அந்த குறைகளை உடனடியாக ஊழியர்களை வைத்து சரி செய்து வருகின்றனர். இதுகுறித்து குடிநீர் வாரிய பகுதி பொறியாளர் ஜெயபிரகாஷ் கூறுகையில், ''அண்ணாநகர், திருமங்கலம், அமைந்தகரை, வில்லிவாக்கம், அயனாவரம், டி.பி.சத்திரம் ஆகிய பகுதிகளில் கால்வாய்களை தூர்வாரும் பணிகள் தினமும் நடைபெற்று வருகிறன.அனைத்து பகுதிகளிலும் உள்ள குழாயில் சுத்தமான தண்ணீர் வருகிறதா என்று தினமும் ஆய்வு செய்து வருகிறோம். ஆங்காங்கே தேங்கியுள்ள குப்பையை அகற்றுதல், கால்வாய்களை சரி செய்வது, தூர்வாருவது போன்ற பணிகள் நடக்கிறது.

பருவ மழையை முன்னிட்டு வீட்டின் அருகே கால்வாயில் அடைப்பு ஏற்பட்டு, கழிவுநீர் வெளியேறினால் உடனடியாக குடிநீர் வாரிய அலுவலகத்துக்கு தெரியபடுத்தவும். பொதுமக்கள் புகார் கொடுத்து ஊழியர்கள் பணி செய்யவில்லை என்றால் என்னிடம் புகார் கொடுக்கலாம், '' என்றார்.

தின பூமி நாளிதழ் படியுங்கள்

### கோயம்புத்தூர் மாவட்டத்தில்

# மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 15 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3.14 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்

## மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலர் ஜெயஸ்ரீமுரளிதரன் வழங்கினார்

**கோவை,டிச.04-**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினவிழாவில் *15* மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.*3.14* இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் , பல்வேறு போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் கோயம்புத்தூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலர் ஜெயஸ்ரீமுரளிதரன் வழங்கினார்;.

கோயம்புத்தூர் மாநகராட்சி சித்தாபுதூர் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், இன்று *(03.12.2023)* மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினவிழாவில் *15* மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.*3.14* இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் கோயம்புத்தூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலர் ஜெயஸ்ரீ முரளிதரன் வழங்கினார்;. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்திகுமார் பாடி மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஜெகதீஷன், அரிமா சங்க மாவட்ட ஆளுநர் ஆர்.மோகன்குமார், பேச்சு பயிற்சியாளர் வை.ஸ்வர்ண பவானி, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுபாஷ், இயன்முறை மருத்துவர் மதன்கோபால் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலர் ஜெயஸ்ரீ முரளிதரன் தெரிவித்ததாவது,

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ஆம்நாள் உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவாக கொண்டாடப்படுகிறது. இன்று உங்கள் அனைவருக்கும் மாற்றுத்திறனாளிகள் தின வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மாற்றுத்திறனாளிகள் என்ற வார்த்தையே அவர்களுக்கு ஒரு நேர்மறையான எண்ணம் கொண்டுவருவதாக இருக்கின்றது. மாற்றுத்திறனாளிகள் மற்ற மனிதர்களைவிட திறமைவாய்ந்தவர்களாக இருப்பார்கள். பார்வையற்றவர்களாக இருந்தாலும் அந்ததிறன்கொண்டு அவர்களால் படிக்கமுடிகிறது. வாழ்க்கையில் சாதிக்க முடிகிறது. மாற்றுத்திறனாளிகள் ஐ.ஏ.எஸ், ஐ.ஆர்.எஸ் பணியிலும் பிற உயர் பணிகளிலும் இருக்கின்றார்கள். பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் வெளிநாடுகளுக்கு சென்று நல்ல உயர்ந்த இடத்தில் பணியாற்றுகிறார்கள்.

தமிழ்நாடு அரசு அதிகமுக்கியத்துவம் கொடுக்கக்கூடிய துறைகளில் ஒன்றாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளது. மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.;

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் உள்ளது. இதன் மூலம் இத்துறைக்கு அரசு எந்தளவிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம்.

தமிழ்நாட்டைசேர்ந்த மாரியப்பன் மாற்றுத்திறனாளிகளுக்கான பாராஒலிம்பிக் போட்டியில் பரிசு வென்று இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் மிகப்பெரியஅளவில் புகழ் சேர்த்துள்ளார். அதேபோல் சுதாசந்திரன் மாற்றுத்திறனாளியாக இருந்தாலும், பரதநாட்டியத்திலும், திரைத்துறையிலும் சாதனைப்படைத்துள்ளார். இது போன்ற பலபேர் மாற்றுத்திறனாளிகளாக இருந்தாலும் வாழ்க்கையில் சாதித்துள்ளனர். இங்கு உள்ள குழந்தைகளும் அதுபோல் சாதிக்க வேண்டும். அதற்கு வாழ்க்கையில் இருக்கும் சிறுசிறு தடைக்கற்களை தாண்டி அதனை படிக்கற்களாக மாற்றி மேலே வரவேண்டும். அதற்கு அவர்களின் பெற்றோர்களும், மற்றவர்களும் உறுதுணையாக இருக்கவேண்டும். சாதிக்க நினைப்பவர்களுக்கு வானமே எல்லை. சாதனை படைப்பதற்கான உந்துதலை பெற்றோர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டவர்கள் கொடுக்க வேண்டும். அறிவியல் அறிஞர்கள் என்று யோசித்தவுடன் நம்மில் பலருக்கு உடனடியாக நினைவுக்கு வருவது ஆல்பர்ட் ஐன்ஸ்டின், தாமஸ் ஆல்வா எடிசன், ஆகிய இரண்டு அறிஞர்களுமே மாற்றுத்திறனாளிகள் தான். இன்றும் உலகமே அவருடைய அறிவை போற்றிக்கொண்டிருக்கிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கென்று தனியாக ஒரு துறையினை உருவாக்கி அவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். உலக வங்கி நிதி உதவியுடன் கடைகோடியில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் சேவைகள் வழங்கிட தமிழ்நாடு அரசு மூலம் உரிமைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த சேவைகள் முழுமையாக கிடைத்திடும் வகையில் ஒவ்வொரு உட்கோட்டத்திலும் ஒருங்கிணைந்த ஒரிட சேவைகள் மையம் மற்றும் வட்டார அளவில் ஓரிட துணை சேவை மையம் அமைத்து பணிகள் மேற்கொள்ளுதல், அனைத்து மாற்றுத்திறனாளிகளையம் கண்டறியும் வகையில் கணக்கெடுப்பு பணிகள் மேற்கொண்டு சமூக தரவு தளத்தை உருவாக்குதல், தற்சார்பு மற்றும் ஆக்க திறனை மேம்படுத்துவதற்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் முன் மாதிரி திட்டங்கள் செயல்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கியநோக்கமாகும். ஓரிட சேவை மையங்கள் மூலம் பிசியோதெரபி, ஸ்பீச்தெரபி, குழந்தைகளுக்கான குறைபாடுகளை விரைவில் கண்டறிந்து, உடனடி சிகிச்சை அல்லது தொடர் சிகிச்சை அளிக்கப்படும். மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுப்பு பணியினை ஒவ்வொரு வார்டு, கிராமம், ஊராட்சி, என அனைத்து பகுதிகளிலும் சிறுகுழந்தைகள் முதல் வயதனவர்கள் வரை அனைத்து மாற்றுத்திறனாளிகள் குறித்த கணக்கெடுப்பு பணியினையும் கணக்கெடுப்பு அலுவலர்கள் மேற்கொள்ளவேண்டும். மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைதான் முதலில் அவர்களுக்கு தேவை. ஏனெனில் ஒவ்வொரு மாற்றுத்திறனாளிகளும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கு இந்த அடையாள கட்டாயம் தேவை. எனவே, மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கு, முதலில் இந்த கணக்கெடுப்பு பணியின்போது எந்தவொரு மாற்றுத்திறனாளிகளும் விடுபட்டுவிடாமல் கவனமாக கணக்கெடுப்பு பணியினை மேற்கொள்ளவேண்டும் என கோயம்புத்தூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலர் ஜெயஸ்ரீ முரளிதரன் தெரிவித்தார்.

### ஈரோடு மாவட்டத்தில்

# மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்

## கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா வழங்கினார்



**ஈரோடு,டிச.04-**

ஈரோடு மாவட்டம், திண்டல், செங்கோடம்பாளையம், யு.ஆர்.சி.மெட்ரிகுலேசன் பள்ளியில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம் முன்னிலையில், கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு, மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட் டுச் சான் றி தழ், கோப்பை மற்றும் பதக்கங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா பேசியதாவது,

உலக மாற்றுத்திறனாளிகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3 அன்று அனுசரிக்கப்பட்டு வருகிறது. இதனை அனுசரிக்கும் விதமாக ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு சிறப்பு பள்ளிகள், அரசு உதவி பெறும் சிறப்பு பள்ளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் துறையின் கீழ் அங்கீகாரம் பெற்று நடத்தப்படும் சிறப்பு பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. இப்போட்டிகளில் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த *10* பள்ளிகளில் பயிலும் *252* குழந்தைகள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளனர். அவர்களுக்கான பரிசுகள் இன்று வழங்கப்படுகிறது.

தற்பொழுது, ஈரோடு மாவட்டத்தில் இதுநாள் வரை *41,111* நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் *21,841* நபர்களுக்கு தனித்துவம் வாய்ந்த தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு *2022-2023*-ஆம் நிதியாண்டில் *8203* பயனாளிகளுக்கு ரூ.*19.15* கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. *2021-2022*-ஆம் நிதியாண்டில் ரூ.*13.00* கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டை விட இவ்வாண்டில் அரசு *6* கோடி மதிப்பில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்கு ஒதுக்கீடு செய்து பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித்தொகை ரூ.*2000*- வழங்கும் திட்டத்தின் கீழ் *2021-2022*-ஆம் நிதியாண்டில் *5,638* பயனாளிகளுடன் இந்நிதியாண்டில் கூடுதலாக *1,741* பயனாளிகளுக்கு மாதம் ரூ.*2000*-வீதம் மொத்தம் *7,379* பயனாளிகளுக்கு ரூ.*14,48,07,870*- மதிப்பிலான பராமரிப்பு உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு *19* வகையான உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் *1602* நபர்களுக்கு ரூ.*1,77,94,475*- மதிப்பீட்டிலான உதவி உபகரணங்கள் மற்றும் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் *304* நபர்களுக்கு ரூ.*10,70,000*-(ரூபாய் பத்து இலட்சத்து எழுபதாயிரம்) மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

வங்கிக்கடன் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் *39* நபர்களுக்கு ரூ.*7,58,660*- மதிப்பில் மானியமும், திருமண உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் *16* நபர்களுக்கு ரூ.*6,00,000*- மதிப்பில் உதவித்தொகையுடன் அதனுடன் சேர்த்து *16* நபர்களுக்கு *8* கிராம் தங்க நாணயமும் வழங் கப் பட் டுள் ளது. மேலும், தொண்டு நிறுவனங்களுக்கு சம்பள மானியம் மற்றும் உணவூட்டு மானியமாக ரூ.*13,44,000*- வழங் கப் பட் டுள் ளது. ஆவின் பாலகம் வழங்கும் திட்டத்தின் கீழ் *17* மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.*50,000*- வீதம் ரூ.*8,50,000*- வழங்கப்பட்டுள்ளது. பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச பயணச்சலுகை வழங்கும் திட்டத்தின் கீழ்; *410* பயனாளிகளுக்கு வருடம் முழுவதும் பயணம் மேற்கொள்ள இலவச பயணச்சலுகை (டீரள Pயளள) வழங்கப்பட்டுள்ளது.

உலக வங்கி நிதியுதவியுடன் கடைக்கோடியில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு சேவைகள் வழங்கிட தமிழ்நாடு அரசு மூலம் உரிமைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்திட ரூ.*1,773* கோடி நிதி உதவி (தமிழ்நாட்டு அரசு பங்கு தொகை *30* சதவீதம் மற்றும் உலக வங்கி *70* சதவீதம்) வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த சேவைகள் முழுமையாக கிடைத்திடும் வகையில் ஒவ்வொரு உட்கோட்டத்திலும் ஒருங்கிணைந்த ஓரிட சேவை மையங்கள் மற்றும் வட்டார அளவில் ஓரிட துணை சேவை மையங்கள் அமைத்து பணிகள் மேற்கொள்ளுதல், அனைத்து மாற்றுத்திறனாளிகளையும் கண்டறியும் வகையில் கணக்கெடுப்பு பணிகள் மேற்கொண்டு சமூக தரவு தளத்தை உருவாக்குதல், தற்சார்பு மற்றும் ஆக்க திறனை மேம்படுத்துவதற்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் முன் மாதிரி திட்டங்கள் செயல்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தற்பொழுது, உரிமைகள் திட்டத்தின் ஒரு அங்கமாக தமிழகம் முழுவதும் நவம்பர் *29* அன்று மாற்றுத்திறனாளிகளுக்கான சமூக தரவுகள் பதிவு-*2023*, *14* வட்டாரங்கள், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் மொத்தமாக *315* ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மகளிர் திட்ட களப்பணியாளர்கள் மற்றும் கணக்கெடுப்பாளர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.கணக்கெடுப்பாளர்கள் தங்கள் இல்லம் தேடி வரும்பொழுது மாற்றுத்திறனாளிகள் உரிய விவரங்களை கணக்கெடுப்பாளர்களுக்கு வழங்கி ஈரோடு மாவட்டத்தில் *100* சதவீத மாற்றுத்திறனாளிகளுக்கான கணக்கெடுப்பு மேற்கொள்ள தங்கள் ஒத்துழைப்பை நல்குமாறும், மற்றும் அரசின் திட்டங்களை மாற்றுத்திறனாளிகள் நல்ல முறையில் பெற்று பயன்பெறுமாறும் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகளில், ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு சிறப்பு பள்ளிகள், அரசு உதவி பெறும் சிறப்பு பள்ளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் துறையின் கீழ் அங்கீகாரம் பெற்று நடத்தப்படும் சிறப்பு பள்ளிகள் என *10* பள்ளிகளைச் சேர்ந்த பயிலும் *252* மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற அனைவருக்கும் கலெக்டர் , பாராட்டுச் சான்றிதழ், பரிசுக் கோப்பை ஆகியவற்றை வழங்கினார். மேலும் இன்றைய தினம் செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கான ஓட்டப் பந்தயம், நின்று நீளம் தாண்டுதல், வட்டத் தட்டு எறிதல் உள்ளிட்ட பல்வேறு வகையான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. முன்னதாக, ஈரோடு மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு, விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கோதைச் செல்வி, யு.ஆர்.சி. கல்வி நிறுவன தலைவர் கனகசபாபதி மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# மத்தியபிரதேசம் உள்ளிட்ட 3 மாநிலங்களில் பா.ஜ.க.,வெற்றி ஊட்டியில் பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி கொண்டாட்டம்

**ஊட்டி, டிச.04-**

மத்தியபிரதேசம் உள்ளிட்ட *3* மாநிலங்களில் பா.ஜ.க., அமோக வெற்றி பெற்றதையடுத்து ஊட்டியில் அக்கட்சியினர் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் கொண்டாடினர்.



மத்தியபிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன. இதில் மத்திய பிரதேசத்தில் முன்பைவிட அதிக இடங்களில் வெற்றி பெற்று பா.ஜ..க. ஆட்சியை தக்கவைத்ததுடன் ;, ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களில் ஆட்சியை பிடித்துள்ளது. தெலுங்கானாவில் காங்கிரஸ் கட்சி ஆட்சியை பிடித்துள்ளது. இந்த நிலையில் பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னோட்டமாக நடைபெற்ற இந்த தேர்தல் வெற்றியை கொண்டாடும் விதமாக ஊட்டி ஏடிசி பகுதியில் பா.ஜ.க.வினர் பட்டாசு வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும் கொண்டாடினர். மாவட்ட தலைவர் மோகன்ராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மண்டல் தலைவர் பிரவீண் முன்னிலை வகித்தார். இந்த நிகழ்வில் மாவட்ட பொதுச் செயலாளர் பரமேஸ்வரன், மாவட்ட பொருளாளர் தர்மன் மாவட்ட செயலாளர் வெங்கடேஷ் ,அலுவலக செயலாளர் அருண்குமார், நகர பொதுச்செயலாளர் சுரேஷ் குமார், நகரச் செயலாளர் ராகேஷ், கிளைத் தலைவர் சதீஷ், மேல் கவ்வட்டி சுரேஷ், மாவட்ட மகளிர் அணி பொதுச் செயலாளர் அனிதா கிருஷ்ணன், நகர மகளிர் அணி பொதுச் செயலாளர் காயத்ரி மாவட்ட அமைப்பு சாரா துணைத் தலைவர் ஆட்டோ மோகன், மாநில செயற்குழு உறுப்பினர் சென்ன கேசவன், நகர துணை தலைவர் சுதாகர், மாவட்ட வர்த்தக அணி பொதுச்செயலாளர் நாகராஜ், ஊட்டி நகர பட்டியல் அணி துணைத் தலைவர் முருகேஷ், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு வெற்றியை கொண்டாடி மகிழ்ந்தனர். இந்த வெற்றி குறித்து மாவட்ட தலைவர் மோகன் ராஜ் கூறியதாவது-

இன்று(நேற்று) நடைபெற்ற *4* மாநில சட்டமன்ற தேர்தலில் மூன்று மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சியை பிடித்துள்ளது. மத்திய பிரதேசத்தில் மீண்டும் ஆட்சியை பிடித்ததுடன், ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங்களிலும் அமோக வெற்றி பெற்று ஆட்சியை பிடித்துள்ளது. இந்த வெற்றியானது பாரதப் பிரதமர் மோடிஜியின் ஆட்சிக்கு கிடைத்த அங்கீகாரமாகும். எனவே *2024* ஆம் ஆண்டு நடைபெறும் பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க., *400*-க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்று *3*-வது முறையாக மோடிஜி தலைமையில் ஆட்சி அமைக்கும் என்றார்.

# உலக நன்மை வேண்டி ஈரோட்டில் ஜெசிஐ சார்பாக மினி மாரத்தான் ஓட்டம்



**ஈரோடு டிச.04-**

உலக நன்மை வேண்டியும் போரில்லா உலகத்தை உருவாக்கும் என்ற கருத்தை வலியுறுத்தியும் ஈரோட்டில் நேற்று ஜெசிஐ ஈரோடு எக்ஸெல் சார்பாக சார்பாக மினி மாரத்தான் ஓட்டம் நேற்று நடைபெற்றது இதற்கு ஜெசிஐ ஈரோடு எக்ஸெல் தலைவர் ஜெசி எம் ராஜேந்திர பிரசாத் தாங்கினார். ஈரோடு வேளாளர் பொறியியல் கல்லூரி தாளாளர் எஸ். டி சந்திரசேகர் மற்றும் ரங்கம்பாளையம் கொங்கு கல்வி நிலையம் தாளாளர் வி செல்வராஜ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு கொடியை அசைத்து ஓட்டத்தை துவங்கி வைத்தனர் ஈரோடு வேளாளர் பொறியியல் கல்லூரியில் தொடங்கிய இந்த மினி மாரத்தான் வில்லரசம்பட்டி நால்ரோடு வரை சென்று திரும்ப வேளாளர் பொறியியல் கல்லூரியில் முடிவடைந்தது இதில் மூன்று வயது முதல் *12* வயது வரை பள்ளி மாணவி மாணவிகள் *1500* பேர் பங்கேற்றனர் பங்கேற்ற அனைவருக்கும் டி சர்ட் சான்றிதழ்கள் பதக்கங்கள் வழங்கப்பட்டது தொடர்ந்து ஈரோடு எக்ஸெல் தலைவர் ஜெசிஐ எம் ராஜேந்திர பிரசாத்கூறுகையில்.

உலக நன்மை வேண்டியும் போரில்லா உலகத்தை உருவாக்கும் என்ற கருத்தை வலியுறுத்தியும் இந்த மினி மாரத்தான் போட்டி நடத்தப்பட்டது ஜெசிஐ எக்ஸெல் ஈரோடு பள்ளி கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு பேச்சுப்போட்டி கட்டுரை போட்டி இசை போட்டு ஓவிய போட்டி மற்றும் பொது அறிவு போன்ற போட்டிகளை நடத்தி பரிசுகள் கொடுத்து வருகிறோம் மாணவ மாணவிகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கு இது நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது மேலும் இலவச மருத்துவ முகாம் ரத்ததான முகாம் கண் மருத்துவ முகாம் மற்றும் இலவச கண் அறுவை சிகிச்சை முகாம் நடத்தி வருகிறோம் மேலும் தமிழ்நாட்டில் உள்ள *200*க்கும் மேற்பட்ட ஆசிரிய பெருமக்களுக்கு வருடம் தோறும் சிறந்த ஆசிரியர் விருது வழங்கி வருகிறோம் பொது அறிவு புத்தகம் மற்றும் ஈரோடு விவரங்கள் அடங்கிய மேப் ஆகியவற்றையும் வெளியிட்டுள்ளோம் இவ்வாறு அவர் கூறினார் மாரத்தான் ஓட்டத்தின் முடிவில் ஜெசிஐ திட்ட மேலாளர் பிரதீப் நேரு நன்றி கூறினார்

# அரசு தட்டச்சு தேர்வினை விடுமுறை நாட்களில் நடத்திட அரசுக்கு கோரிக்கை

**ஈரோடு டிச.04-**


தமிழ்நாடு தட்டச்சு- கணினி பள்ளிகள் சங்கத் தலைவர் எல். செந்தில் முதல்வருக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளார் அதில் கூடியிருப்பதாவது

தமிழகத்தில் அரசு அங்கீகாரம் பெற்ற சுமார் *4500*க்கும் மேற்பட்ட தட்டச்சுப் பயிலகங்கள் இயங்கி வருகின்றனர். ஆண்டிற்கு இரு பருவங்களில் (பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட்) தேர்வு நடத்தப்படுகிறது. தோராயமாக ஒரு பருவத்திற்கு *2.50* இலட்சம் மாணாக்கர்கள் இத்தேர்வில் கலந்துகொள்கின்றனர். *.TNPSC* மூலம் தட்டச்சர் வேலைவாய்ப்பினை பெறலாம் என்ற நோக்கில் இவர்கள் இக்கல்வியினை பயின்று வருகின்றனர்.

தொழில்நுட்பத் தேர்வு வாரியத்தின் மூலம் நடத்தப்படும் தட்டச்சுத் தேர்வுகள் வழக்கமாக பிப்ரவரி கடைசி சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெறுவது வழக்கம். ஆனால் வர இருக்கின்ற பிப்ரவரி *2024*ல், *24, 25* மற்றும் *26* தேதிகளில் (சனி,ஞாயிறு,திங்கள்) நடத்தப்பட உள்ளதாக தேர்வு வாரியத்தால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. பெரும்பாலும் பள்ளி மாணாக்கர்கள் அதிக அளவில் தட்டச்சுத் தேர்வில் கலந்து கொள் கின் றனர். தேர்வு திங்கள் கிழமை வைப்பதால் *10, 11*ம் வகுப்பு மாணாக்கர்களுக்கு அன்றைய தேதிகளில் செயல்முறைத்தேர்வுகள் நடைபெற இருக்கின்றது. எனவே சனி மற்றும் ஞாயிறு கிழமைகளில் மட்டுமே தேர்வினை நடத்திட வேண்டுமாய் தமிழக முதல்வர்களுக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மேலும் தட்டச்சுத் தேர்விற்கான மையம் குறைந்தது *5 10*கி.மீ தொலைவிற்குள்

இருந்தால்தான் மாணாக்கர்கள் சிரமமின்றி தேர்வு மையத்திற்கு வந்துசெல்ல வசதியாக இருக்கும். தற்போதுள்ள நிலை *35 50* கி.மீ. தொலைவு வரை தேர்விற்காக மாணாக்கர்கள் செல்ல வேண்டிய நிலையே உள்ளது. இதனால் பெற்றோர்கள் தங்களது வேலையினை விட்டு பிள்ளைகளை தேர்வு மையத்திற்கு வெகுதூரம் அழைத்துசெல்ல வேண்டிய நிலை. மேலும் தட்டச்சுத் தேர்வின்போது அணி மாற்றம் செய்தல் மற்றும் விண்ணப்பத்தில் ஏதேனும் பிழைகள் திருத்தம் செய்ய வேண்டியிருப்பின் அதற்கு தண்டலாக ரூ.*1000/-* மற்றும் ரூ.*1300/-* தொகை தேர்வு வாரியம் நிர்ணயித்துள்ளது. இத்தொழில் தொடங்கி இன்றைய காலம் வரை வரலாற்றிலேயே தண்டல் வசூலித்த நிகழ்வு இப்போதுதான் நிகழ்கின்றது. எனவே மாணாக்கர்களின் நலனைக் கருதி இந்த தண்டல் தொகையிலிருந்து விடுவித்து உதவுமாறும் தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதென தமிழ்நாடு தட்டச்சு- கணினி பள்ளிகள் சங்கத் தலைவர் எல். செந்தில் முதல்வருக்கு கோரிக்கை மனு சமர்ப்பித்துள்ளார் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# அடுத்த உலகக் கோப்பையில் விளையாடுவது குறித்து மெஸ்ஸி கருத்து



**பியூனஸ் அய்ரஸ்.டிச.04.**

எதிர்வரும் 2026 கால்பந்து உலகக் கோப்பை தொடர் கனடா, மெக்சிக்கோ மற்றும் அமெரிக்காவில் நடைபெற உள்ளது. இதில் மொத்தம் 48 அணிகள் பங்கேற்று விளையாட உள்ளன. இந்த தொடருக்கான தகுதி சுற்றுப் போட்டிகளில் தற்போது சர்வதேச கால்பந்து அணிகள் விளையாடி வருகின்றன. இந்த சூழலில் 2026 உலகக் கோப்பை தொடரில் விளையாடுவது குறித்து மெஸ்ஸி கருத்து தெரிவித்துள்ளார்.

"நான் '2026 உலகக் கோப்பை' குறித்து இப்போதைக்கு யோசிக்கவில்லை. ஆனால், என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். அதில் பங்கேற்க முடியாமல் போவதற்கு எனது வயது காரணமாக இருக்கலாம். இருந்தாலும் என்ன நடக்கிறது என பார்ப்போம்.

இப்போதைக்கு 2024 ஜூன் மாதம் நடைபெற உள்ள கோபா அமெரிக்கா தொடரில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். அது எங்களுக்கு சாதகமாக அமைந்தால் தொடர்ந்து கவனம் செலுத்த வாய்ப்பு உள்ளது. அப்படி இல்லை என்றால் அது மிகவும் கடினம்.

நான் களத்தில் சிறந்த செயல்பாட்டை வெளிப்படுத்தும் வரை தொடர்ந்து விளையாடுவேன். எனது எண்ணம் எல்லாம் கோபா அமெரிக்கா தொடர் மீது உள்ளது. அதன் பிறகு நான் விளையாடுவதை காலம் தீர்மானிக்கும்" என 36 வயதான மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.

"கத்தார் உலகக் கோப்பை இறுதிப் போட்டிக்கு பிறகு எனது ஓய்வு முடிவு நேர்மாறாக அமைந்தது. இப்போது நான் அணியில் இருக்க விரும்புகிறேன். உலகக் கோப்பை தொடர் நடைபெறும் போது எனது வயது அதில் விளையாட அனுமதிக்காது என்பதை அறிவேன்" என அவர் தெரிவித்துள்ளார். கத்தார் உலகக் கோப்பை தொடரில் மெஸ்ஸி தலைமையிலான அர்ஜென்டினா அணி சாம்பியன் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது.

# சொந்த மண்ணில் முதன் முறையாக நியூஸிலாந்தை டெஸ்ட் போட்டியில் வீழ்த்தி வங்கதேசம் சாதனை




**சில்ஹெட்,டிச.04**

சொந்த மண்ணில் முதன் முறையாக நியூஸிலாந்து அணியை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வீழ்த்தி சாதனை படைத்தது வங்கதேச அணி.

நியூஸிலாந்து அணி வங்கதேசத்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி சில்ஹெட் நகரில் நடைபெற்று வந்தது. இதன் முதல் இன்னிங்ஸில் வங்கதேச அணி 310 ரன்களும், நியூஸிலாந்து அணி 317 ரன்களும் எடுத்தன.

7 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்ஸை விளையாடிய வங்கதேசம் அணி 100.4 ஓவர்களில் 338 ரன்கள் குவித்து அனைத்து விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக கேப்டன் நஜ்முல் ஹொசைன் ஷான்டோ 105, முஸ்பிகுர் ரகிம் 67, மெஹிதி ஹசன் 50 ரன்கள் சேர்த்தனர். நியூஸிலாந்து அணி சார்பில் அஜாஸ் படேல் 4, இஷ் சோதி 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

332 ரன்கள் இலக்குடன் பேட் செய்தநியூஸிலாந்து அணியானது வங்கதேசத்தின் சுழற்பந்து வீச்சில் ஆட்டம் கண்டது. டாம் லேதம் 0, டேவன் கான்வே 22, கேன் வில்லியம்சன் 11, ஹென்றி நிக்கோல்ஸ் 2, டாம் பிளண்டல் 6, கிளென் பிலிப்ஸ் 12, கைல் ஜேமிசன் 9 ரன்களில் வெளியேறினர். 4-வது நாள் ஆட்டத்தின் முடிவில் நியூஸிலாந்து அணி 49 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 113 ரன்கள் எடுத்தது.

டேரில் மிட்செல் 44, இஷ் சோதி 7 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்று கடைசி நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய நியூஸிலாந்து அணி 71.1 ஓவர்களில் 181 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. தனது 9-வது அரை சதத்தை கடந்த டேரில் மிட்செல் 120 பந்துகளில், 7 பவுண்டரிகளுடன் 58 ரன்கள் எடுத்த நிலையில் நயீம் ஹசன் பந்தை ஸ்வீப் ஷாட் விளையாட முயன்ற போது பேக்வேர்டு ஸ்கொயர் திசையில் நின்ற தைஜூல் இஸ்லாமிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

இதன் பின்னர் களமிறங்கிய கேப்டன் டிம் சவுதி 24 பந்துகளில், 2 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரியுடன் 34 ரன்களும், நிதானமாக விளையாடிய இஷ் சோதி 91 பந்துகளில், 2 பவுண்டரிகளுடன் 22 ரன்களும் சேர்த்த நிலையில் தைஜூல் இஸ்லாம் பந்தில் நடையை கட்ட நியூஸிலாந்து அணியானது 150 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது.

வங்கதேச அணி தரப்பில் தைஜூல் இஸ்லாம் 6 விக்கெட்களை வீழ்த்தினார். நயீம் ஹசன் 2 விக்கெட்களையும் ஷோரிபுல் இஸ்லாம், மெஹிதி ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இரு இன்னிங்ஸையும் சேர்த்து கூட்டாக 10 விக்கெட்கள் வீழ்த்திய தைஜூல் இஸ்லாம் ஆட்ட நாயகனாக தேர்வானார். சொந்த மண்ணில் நியூஸிலாந்து அணியை டெஸ்ட் போட்டியில் வங்கதேச அணி வீழ்த்துவது இதுவே முதன்முறையாகும்.

இதற்கு முன்னர் சொந்த மண்ணில் நியூஸிலாந்து அணிக்கு எதிராக 6 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி ஒன்றில்கூட வங்கதேச அணி வெற்றி பெற்றது இல்லை. இதில் 3 ஆட்டங்களில் தோல்விஅடைந்திருந்த வங்கதேச அணி 3 ஆட்டங்களை டிரா செய்திருந்தது. தற்போதைய வெற்றியின் மூலம் 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் வங்கதேச அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது. 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி வரும் 6-ம் தேதி மிர்பூரில் தொடங்குகிறது.

ஆட்ட நாயகன் விருது பெற்ற வங்கதேச அணி வீரர் தைஜூல் இஸ்லாம்.

# ராயுடுவின் இடத்திற்கு இந்த இந்திய வீரரை வாங்க சிஎஸ்கே முனைப்பு காட்டும்

## ரவிச்சந்திரன் அஸ்வின் தகவல்

**சென்னை,டிச.04**

இந்தியாவில் நடத்தப்படும் உள்ளூர் டி20 தொடரான ஐபிஎல்-ன் 17-வது சீசன் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. இதையொட்டி விடுவிக்கப்படும் மற்றும் தக்கவைக்கப்படும் வீரர்களின் பட்டியலை அணி நிர்வாகங்கள் சமர்ப்பிக்க ஐ.பி.எல். அமைப்பு கொடுத்திருந்த காலக்கெடு கடந்த மாதம் 26ஆம் தேதியுடன் நிறைவடைந்தது.

அதன்படி ஒவ்வொரு அணியும் விடுவிக்கப்படும் மற்றும் தக்கவைக்கப்படும் வீரர்களின் பட்டியலை சமர்ப்பித்தன.இதனையடுத்து இந்த சீசனுக்கான வீரர்கள் ஏலம் வரும் 19-ந்தேதி துபாயில் நடக்க உள்ளது.

இந்த ஏலத்தில் இந்தியா உள்பட பல நாடுகளை சேர்ந்த 1,166 வீரர்கள் தங்களது பெயர்களை பதிவு செய்துள்ளனர். இந்த பட்டியலில் 830 இந்திய வீரர்கள் மற்றும் 336 வெளிநாட்டு வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.இந்நிலையில் சென்னை அணியில் இடம் பெற்றிருந்த முன்னணி வீரரான அம்பத்தி ராயுடு கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார்.

இதனால் அம்பத்தி ராயுடுவுக்கு பதிலாக அவரது இடத்தை நிரப்ப எந்த வீரரை சென்னை அணி தேர்வு செய்யும்? என ரசிகர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.இந்நிலையில் ராயுடுவுக்கு பதில் கருண் நாயரை வாங்க சிஎஸ்கே அணி முனைப்பு காட்டும் என தமிழக கிரிக்கெட் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் தனது கருத்தை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

என்னை பொருத்தவரை சிஎஸ்கே அணி ராயுடுவின் இடத்தில் விளையாட கருண் நாயரை ஏலத்தில் வாங்க முனைப்பு காட்டும். ஏனெனில் மிடில் ஆர்டருக்கு ஷாருக்கான் போன்ற அதிரடி வீரர்கள் செட்டாக மாட்டார்கள். எனவே அந்த இடத்தை பூர்த்தி செய்ய சுழற்பந்து வீச்சை நன்றாக எதிர்கொண்டு ஆடும் ஒரு பேட்ஸ்மேன் அவர்களுக்கு தேவை.அந்த வகையில் பார்க்கையில் கருண் நாயர் சையத் முஸ்டாக் அலி தொடரில் மிகச் சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தி உள்ளார். அதனால் அவரை மஞ்சள் நிற உடையில் பார்க்க வாய்ப்பு இருக்கிறது.

அதோடு சிஎஸ்கே அணி பெரும்பாலான போட்டிகளை சேப்பாக்கம் மைதானத்தில் விளையாடுவதால் சுழற்பந்து வீச்சை சமாளித்து ஆடும் பேட்ஸ்மேன்கள் மீது அதிக ஆர்வம் காட்டும் தோனியும் அதையேதான் விரும்புவார். இவ்வாறு அவர் கூறினார்.

## 66-வது தேசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்:

# தங்கம் வென்றார் இளவேனில்





**புதுடெல்லி,டிச.04**

66-வது தேசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில் டெல்லியில் நடைபெற்றது. இதில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் குஜராத்தை சேர்ந்த இளவேனில் வாலறிவன் தங்கப் பதக்கம் வென்றார்.

8 பேர் கொண்ட இறுதிப் போட்டியில் இளவேனில் வாலறிவன் 253.4 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தார். ஹரியாணாவின் ரமிதா ஜின்டால் 252.5 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும், அதே மாநிலத்தைச் சேர்ந்த நான்சி வெண்கலப் பதக்கமும் கைப்பற்றினர்.

# மீண்டும் டென்னிஸ் களத்திற்கு திரும்பும் ரபேல் நடால்




**மாட்ரிட்,டிச.04**

22 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான ஸ்பெயினை சேர்ந்த நட்சத்திர டென்னிஸ் வீரர் ரபேல் நடால் ஏறக்குறைய 1 ஆண்டுக்கு பின் மீண்டும் டென்னிஸ் களத்திற்கு திரும்ப உள்ளார்.காயம் காரணமாக இந்த ஆண்டு நடைபெற்ற எந்த வித டென்னிஸ் தொடரிலும் பங்கேற்காத நிலையில், குணமடைந்த பிறகு மீண்டும் களத்திற்கு திரும்ப உள்ளார். அதன்படி நடால் டிசம்பர் 31 முதல் ஜனவரி 7ஆம் தேதி வரை நடைபெற உள்ள பிரிஸ்பேன் இண்டர்நேஷனல் டென்னிஸ் தொடரில் விளையாட உள்ளார்.

## பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின்

# ஆலோசகராக நியமிக்கப்பட்ட 24 மணிநேரத்தில் சல்மான் பட் நீக்கம்

**கராச்சி,டிச.04**

இந்தியாவில் நடைபெற்று முடிந்த ஐசிசி உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் கோப்பை வெல்லும் என்று எதிர்பார்க்கப்பட்ட பாகிஸ்தான் அணியானது லீக் சுற்றுடன் வெளியேறியது.

குறிப்பாக 50 ஓவர் உலகக்கோப்பை வரலாற்றில் இந்தியாவுக்கு எதிராக தொடர்ந்து 8வது முறையாக தோல்வியை பதிவு செய்த பாகிஸ்தான் அணி, ஆப்கானிஸ்தானுக்கு எதிராக முதல் முறையாக தோற்றது. அதனால் விமர்சனங்கள் எழுந்த நிலையில் தோல்விகளுக்கு பொறுப்பேற்று பாபர் அசாம் தம்முடைய கேப்டன் பதவியை ராஜினாமா செய்தார். மேலும் வஹாப் ரியாஸ் பாகிஸ்தான் அணியின் புதிய தேர்வு குழு தலைவராக அறிவிக்கப்பட்டார்.



ஆனால் அவருக்கு உறுதுணையாக கம்ரான் அக்மல், ராவ் இப்திகார் மற்றும் சல்மான் பட் ஆகியோர் தேர்வுக் குழுவின் ஆலோசகர்களாக செயல்படுவார் என்று பாகிஸ்தான் வாரியம் அறிவித்தது. இதில் சல்மான் பட் ஆலோசகராக நியமிக்கப்பட்டது மிகப்பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியது.ஏனெனில் கடந்த 2010ஆம் ஆண்டு லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் முகமது அமீர் மற்றும் முகமது ஆசிப் ஆகியோருடன் சேர்ந்து சூதாட்டத்தில் ஈடுபட்ட சல்மான் பட் ஆதாரத்துடன் பிடிபட்டதால் சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடுவதற்கு தடை பெற்றார்.

அவரை தேர்வு குழுவின் ஆலோசகராக நியமிப்பது பாகிஸ்தான் அணியை எவ்வாறு முன்னோக்கி எடுத்துச் செல்லும்? என்று பல தரப்பினர் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். குறிப்பாக சூதாட்டம் செய்து நாட்டுக்கு அவப்பெயர் ஏற்படுத்தியவரை தேர்வுக் குழுவில் பார்ப்பேன் என்று நினைக்கவில்லை என பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் முன்னாள் தலைவர் ரமீஸ் ராஜா கடுமையாக விமர்சித்தார்.

இந்நிலையில் தொடர்ச்சியான விமர்சனங்கள் எழுந்ததால் பாகிஸ்தான் தேர்வுக் குழு ஆலோசகராக நியமிக்கப்பட்ட சல்மான் பட் அந்த பொறுப்பிலிருந்து நீக்கப்படுவதாக அந்நாட்டு வாரியம் அறிவித்துள்ளது. வெளியிலிருந்து வந்த விமர்சனங்களை தாண்டி பாகிஸ்தான் வாரியத்திற்குள்ளேயே அவருக்கு சில எதிர்ப்புகள் உருவானதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தேர்வுக் குழு தலைவர் வஹாப் ரியாஸ் தெரிவித்துள்ளார். மேலும் அவருக்கு பதிலாக மற்றொரு முன்னாள் வீரர் குழுவின் ஆலோசகராக நியமிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளதாகவும் வஹாப் ரியாஸ் கூறியுள்ளார்.

# முதல்வர் பதவியை ராஜினாமா செய்த சந்திரசேகரராவ், அசோக் கெலாட்

**அமராவதி, டிச. 04-**

தெலுங்கானா சட்டப்பேரவைத் தேர்தலில் பி.ஆர்.எஸ். கட்சி தோல்வியை தழுவியதைத் தொடர்ந்து, முதல்வர் பதவியை சந்திரசேகரராவ் நேற்று ராஜினாமா செய்தார். இதே போல் ராஜஸ்தான் முதல்வரும் தனது பதவியை நேற்று ராஜினாமா செய்தார்.

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் வாக்குகள் எண்ணும் பணி நேற்று நடைபெற்றது. இதில், பெரும்பான்மைக்குத் தேவையான 60 இடங்களுக்கும் மேல் காங்கிரஸ் முன்னிலை பெற்று வெற்றி பெற்றுள்ளது. இதனால் தெலுங்கானாவில் காங்கிரஸ் தொண்டர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் தெலுங்கானா சட்டப்பேரவைத் தேர்தலில் பி.ஆர்.எஸ். கட்சி தோல்வியை தழுவியதைத் தொடர்ந்து, முதல்வர் பதவியை சந்திரசேகர ராவ் நேற்று ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமாவை ஏற்பதாக கவர்னர் மாளிகை அறிவித்துள்ளது.

இதே போல் ராஜஸ்தானில் பாரதிய ஜனதா கட்சி சுமார் 104 இடங்களில் வெற்றி பெற்று பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறது. இந்நிலையில், காங்கிரசின் தோல்வியை ஒப்புக்கொண்ட அம்மாநில முதல்வரும், காங்கிரஸ் தலைவருமான அசோக் கெலாட் தனது ராஜினாமா கடிதத்தை கவர்னர் கல்ராஜ் மிஸ்ராவிடம் நேற்று மாலை சமர்ப்பித்தார்

# 4 மாநில தேர்தல் முடிவுகள்: முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை,நவ. 04-**

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஷ்கார் ஆகிய மாநிலங்களில் நடந்த சட்டசபை தேர்தல்களில் பா.ஜ.க. அபார வெற்றி பெற்று ஆட்சியை பிடித்துள்ளது. அதே வேளை தெலுங்கானாவில் காங்கிரஸ் கட்சி ஆட்சியை பிடித்துள்ளது.

இந்நிலையில் 4 மாநில தேர்தல்களில் வெற்றி பெற்ற கட்சிகளுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

தெலுங்கானா, மத்திய பிரதேசம், சத்தீஷ்கார், ராஜஸ்தான் ஆகிய மாநில சட்டசபை தேர்தல்களில் வெற்றி பெற்ற கட்சிகளுக்கு வாழ்த்துகள். அனைத்து தரப்பு மக்களுக்கும் சாதகமான மாற்றம், முன்னேற்றம் மற்றும் செழிப்பு ஏற்படும் வகையிலான சிறப்பான ஆட்சி அமைய வாழ்த்துகிறேன். இவ்வாறு அவர் அந்த பதிவில் தெரிவித்துள்ளார்.

# 4 மாவட்டங்களுக்கு இன்று பொது விடுமுறை அறிவிப்பு

**சென்னை, டிச. 04-**

மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு இன்று பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவி வந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நேற்று முன்தினம் அதிகாலையில் தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலம் நேற்று மிச்சாங் புயலாக உருவாகி உள்ளது.

இந்நிலையில் தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு இன்று ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், 4 மாவட்டங்களுக்கும் இன்று பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

4 மாவட்டங்களில் உள்ள பள்ளி, கல்லூரி, அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இன்று பொது விடுமுறை விடப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவை வழங்கும் நிறுவனங்கள் மட்டும் செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புயல் பாதிப்பு: அவசர கால உதவி எண்களை அறிவித்தது தமிழக அரசு

**சென்னை,டிச. 04-**

புயல் மற்றும் கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவசர உதவிக்கான எண்களை தமிழக அரசு அறிவித்துள்ளது.

வங்கக்கடலில் நிலைக்கொண்டுள்ள புயலுக்கு மிக்ஜாம் என பெயரிடப்பட்டுள்ளது. இந்த புயலானது வட தமிழகம் மற்றும் தெற்கு ஆந்திரா பகுதியை நோக்கி வடமேற்கு திசையில் நகர்ந்து, பின் நெல்லூர்- மசூலிப்பட்டினம் இடையே நாளை 5-ம் தேதி மாலை கரையைக் கடக்க உள்ளது.

இந்நிலையில் புயல் மற்றும் கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவசர உதவிக்கான எண்களை தமிழக அரசு அறிவித்துள்ளது. அதன்படி, புயல் பாதிப்பு குறித்து 1077 என்ற எண் மூலம் அவசரகால செயல்பாட்டு மையத்தை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே போல், மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தை 1070 என்ற எண் மூலமாகவும், வாட்ஸ் ஆப் எண் - 9445869848 மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம். புயல் எச்சரிக்கை திரும்ப பெறப்பட்டதாக அறிவிப்பு வரும் வரை பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

# கைதான அமலாக்கத்துறை அதிகாரி மதுரை மத்திய சிறைக்கு மாற்றம்

**மதுரை, டிச. 04-**

திண்டுக்கல் சிறையில் இருந்த அமலாக்க துறை அதிகாரி அங்கிட் திவாரி நேற்று மதுரைக்கு அழைத்து செல்லப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு பின்னர் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் துணை சூப்பிரண்டாக பணியாற்றி வருபவர் டாக்டர் சுரேஷ்பாபு. இவர் மீது வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக தமிழக லஞ்சஒழிப்பு போலீசார் வழக்கு தொடர்ந்தனர். இந்த நிலையில் மதுரை துணை மண்டல அமலாக்கத் துறை அலுவலகத்தில் அதிகாரியாக பணியாற்றி வரும் அங்கிட் திவாரி டாக்டர் சுரேஷ்பாபுவை தொடர்பு கொண்டு வழக்கு குறித்து பேசினார்.

அப்போது அவர் மீது நடவடிக்கை எடுக்க பிரதமர் அலுவலகத்தில் இருந்து உத்தரவு வந்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் டாக்டர் சுரேஷ்பாபு மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க ரூ. 3 கோடி தரவேண்டும் என கூறியுள்ளார். பின்னர் பேரம் பேசி இறுதியாக ரூ.51 லட்சம் தரவேண்டும் என கூறியுள்ளார்.

அவரிடம் ஏற்கனவே ரூ.20 லட்சத்தை அங்கிட் திவாரி பெற்றுள்ளார். 2-வது தவணையாக திண்டுக்கல்லில் பணம் பெற முயன்ற போது லஞ்ச ஒழிப்பு போலீசார் அவரை காரில் துரத்திச் சென்று கைது செய்தனர். அவரிடம் லஞ்சஒழிப்பு டி.எஸ்.பி நாகராஜன் தலைமையிலான போலீசார் விசாரணை நடத்தி திண்டுக்கல் மாவட்ட முதன்மை நீதிபதி மோகனா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.அவரை 15 நாட்கள் சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த நிலையில் அமலாக்கத்துறை அதிகாரி அங்கிட் திவாரி வேறு யாரிடமும் இதே போல் மிரட்டி பணம் பெற்றாரா என போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். அவரது வீடு மற்றும் அலுவலகத்தில் நடைபெற்ற சோதனையில் லேப்டாப் உள்ளிட்ட ஆவணங்களை லஞ்ச ஒழிப்பு போலீசார் எடுத்துச் சென்றனர். மேலும் அங்கிட் திவாரிக்கு நெருக்கமான அதிகாரிகளிடம், அவர்களின் வீடுகளிலும் சோதனை நடத்த போலீசார் திட்டமிட்டுள்ளனர்.

அங்கிட் திவாரியிடம் விசாரணை நடத்தினால் மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அமலாக்கத்துறை அதிகாரி அங்கிட் திவாரியை காவலில் எடுத்து விசாரிக்க லஞ்சஒழிப்புத்துறை போலீசார் இன்று திண்டுக்கல் மாவட்ட கோர்ட்டில் மனு தாக்கல் செய்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் அமலாக்கத்துறை அதிகாரி அங்கிட் திவாரியை மதுரை மத்திய சிறைக்கு மாற்ற போலீசார் முடிவு செய்தனர். அதன்படி திண்டுக்கல் சிறையில் இருந்த அவர் நேற்று மதுரைக்கு அழைத்துச்செல்லப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு பின்னர் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# மிக்ஜாம் புயல்: 5 துறைமுகங்களில் 3-ம் எண் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்

**சென்னை, டிச. 04-**

மிக்ஜாம் புயல் காரணமாக தமிழகத்தில் 5 துறைமுகங்களில் 3-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. சென்னை உள்ளிட்ட வட கடலோர மாவட்டங்களில் அதிக மழை பெய்து வருகிறது. இந்நிலையில் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவி வந்த தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது புயலாக வலுப்பெற்றுள்ளது. சென்னையில் இருந்து 310 கி.மீ. தென்கிழக்கு திசையில் புயல் நிலை கொண்டுள்ளது.

இந்த நிலையில், புயல் உருவானதை குறிக்கும் வகையில் சென்னை, கடலூர், எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி ஆகிய துறைமுகங்களில் 3-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

நாகை, காரைக்கால், பாம்பன், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் 2-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. புயல் காரணமாக பலத்த காற்று வீசும் என்பதால் மீனவர்கள் கடல் பகுதிக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சென்னை காசிமேடு, திருவொற்றியூர், எண்ணூர் கடற்கரைப் பகுதியில் கடல் சீற்றமாக காணப்படுகிறது.

# யுடிடி தேசிய ரேங்கிங் டேபிள் டென்னிஸ்: மானவ் தாக்குர் சாம்பியன்

**விஜயவாடா,டிச.04**



ஆந்திராவின் விஜயவாடாவில் உள்ள ராமகோட்டையா உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்று வந்த யுடிடி தேசிய ரேங்கிங் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் பெட்ரோலிய விளையாட்டு மேம்பாட்டு வாரியத்தை சேர்ந்த மானவ் தாக்குர் 4-2 என்ற கணக்கில் ஜி.சத்தியனை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார்.

மகளிர் பிரிவில் ஆர்பிஐ அணியைச் சேர்ந்த ஸ்ரீஜா அகுலா 4-3 என்ற கணக்கில் பெட்ரோலிய விளையாட்டு மேம்பாட்டு வாரியத்தை சேர்ந்த அர்ச்சனாவை வீழ்த்தி பட்டம் வென்றார்.




சென்னை சேப்பாக்கத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலின், மாவட்ட கலெக்டர்களை காணொலிக்காட்சி வாயிலாக தொடர்பு கொண்டு கனமழை மற்றும் மிக்ஜாம் புயலை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார். ஆய்வின்போது அமைச்சர்கள் கே.என்.நேரு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம்தென்னரசு, தலைமைச்செயலாளர் சிவ்தாஸ்மீனா உடனிருந்தனர்.

# வாக்களித்த மக்களுக்கு நன்றி: சித்தாந்த போர் தொடரும்: ராகுல்

புதுடெல்லி, டிச.04-

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஷ்கார், தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் சட்டசபை தேர்தலுக்கான வாக்குகள் எண்ணும் பணி நேற்று நடைபெற்றது. இந்த தேர்தலில், 3 மாநிலங்களில் பா.ஜ.க. தனித்து ஆட்சி அமைக்க உள்ளது. தெலுங்கானாவில் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்க உள்ளது.

இதனிடையே, தேர்தல் முடிவு குறித்து ராகுல் காந்தி தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

தெலுங்கானாவில் தங்களுக்கு ஆட்சிபொறுப்பை கொடுத்த மக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஷ்கர் மாநில மக்களின் தீர்ப்பை ஏற்கிறோம். சித்தாந்தத்திற்கு இடையேயான போர் தொடரும். இவ்வாறு அந்த பதிவில் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

# தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் இன்று உருவாகிறது மிக்ஜாம் புயல்

## நெல்லூர்-மசூலிப்பட்டினம் இடையே நாளை கரையை கடக்கிறது

சென்னை, டிச. 04-

சென்னை வானிலை ஆய்வு மைய தென்மண்டல தலைவர் பாலச்சந்திரன் இது குறித்து கூறுகையில், தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில், நிலவி வந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நேற்று காலை புயலாக வலுப்பெற்றுள்ளது. மிக்ஜாம் என பெயரிடப்பட்டுள்ள இந்தப் புயல், நேற்று காலை 8.30 மணி நிலவரப்படி சென்னைக்கு தென் கிழக்கே சுமார் 290 கி.மீ. தொலைவில் நிலை கொண்டு இருந்தது. இது தொடர்ந்து வடமேற்கு திசையில் நகர்ந்து, தீவிர புயலாக வலுபெறக்கூடும்.

இது வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று (டிச.4) மாலை மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதியில், வடதமிழகம் தெற்கு ஆந்திர கடற்கரையை ஒட்டியுள்ள பகுதியில் நிலை கொள்ளக்கூடும். அதன் பின்னர், இது வடக்கு திசையில், தெற்கு ஆந்திர கடற்கரைக்கு இணையாக நகர்ந்து நாளை 5-ம் தேதி காலை, நெல்லூருக்கும் மசூலிப்பட்டினத்துக்கும் இடையே கரையைக் கடக்கக்கூடும்.

கடந்த 24 மணி நேரத்தில், வடதமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. 32 இடங்களில் கனமழையும், இரண்டு இடங்களில் மிக கனமழையும் பெய்துள்ளது. அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டில் 15 செ.மீ மழை பதிவாகியுள்ளது. தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்து வரும் இரண்டு தினங்களுக்கு பெரும்பாலான இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

இன்று திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் அதி கனமழையும், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் மிக கனமழையும், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

இன்று திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் மணிக்கு 60 முதல் 70 கி.மீ. வேகத்திலும், அவ்வப்போது 80 கி.மீ வேகத்திலும் பலத்த காற்றானது வீசக்கூடும். விழுப்புரம், புதுச்சேரி மற்றும் கடலூரில், மணிக்கு 50 முதல் 60 கி.மீ. வேகத்திலும், அவ்வப்போது 70 கி.மீ வேகத்திலும் பலத்த காற்றானது வீசக்கூடும்.

தென்மேற்கு வங்கக்கடல், மத்திய மேற்கு வங்கக்கடல், வட தமிழகம் மற்றும் தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் கடல் கொந்தளிப்புடன் காணப்படுவதால், மீனவர்கள் டிச.5ம் தேதி வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் படுகிறார்கள்.

வடகிழக்குப் பருவமழையைப் பொறுத்தவரையில், தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் கடந்த அக்டோபர் 1-ம் தேதி முதல் நேற்று வரை பதிவான மழையின் 35 செ.மீ. இந்த காலக்கட்டத்தின் சராசரி அளவு 37 செ.மீ. இது 6 சதவீதம் இயல்பை விட குறைவு. இவ்வாறு அவர் கூறினார்.


இந்த நிலையில் தமிழக அரசு மிக்ஜாம் புயலால் கனமழையுடன், 60-70 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசும் என்பதால் மக்கள் தேவையின்றி வீட்டை விட்டு வெளியே செல்லவேண்டாம் என்று அறிவுறுத்தி உள்ளது.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், துரைநல்லூர் 110 கி.வோ. துணை மின் நிலையத்தில் நேற்று, வங்கக்கடலில் உருவாகியுள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளை, அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு மேற்கொண்டார். அருகில் மேலாண்மை இயக்குநர் ராஜேஸ் லக்கானி, டி.ஜெ.எஸ்.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. மற்றும் மா.ராமச்சந்திரன், இரா.மணிவண்ணன் உள்ளனர்.



கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கத்தில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டத்திற்கான சிறப்பு முகாமினை நேற்று, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு காப்பீட்டு அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் கிராந்திகுமார் பாடி, மேயர் கல்பனா, மாநகராட்சி ஆணையாளர் சிவகுருபிரபாகரன் ஆகியோர் உடனிருந்தனர்.



திண்டுக்கல்லில் அ.தி.மு.க. பொருளாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் தலைமையில், மாநகராட்சி எதிர்க்கட்சி தலைவரும், மாமன்ற உறுப்பினருமான பாஸ்கரன் இல்ல விழா சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாநில இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் டாக்டர் வி.பி.பி.பரமசிவம், மாநகராட்சி எதிர்க்கட்சி தலைவர் சி.எஸ்.ராஜமோகன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாரதிமுருகன், மாவட்ட இளைஞரணி செயலாளர் வி.டி.ராஜன், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணி, மோகன், முரளி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# பா.ஜ.க. மீது அசைக்க முடியாத ஆதரவை வழங்கிய மக்களுக்கு நன்றி: பிரதமர் மோடி

புதுடெல்லி, டிச.04-

பா.ஜ.க. மீது அசைக்க முடியாத ஆதரவை வழங்கிய மக்களுக்கு நன்றி என்று 4 மாநில தேர்தல் முடிவுகள் குறித்து பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஷ்கார், தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் வாக்குகள் எண்ணும் பணி நேற்று நடைபெற்றது. இதில் 3 மாநிலங்களில் பாஜக தனித்து ஆட்சி அமைக்க உள்ளது.

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஷ்கார் ஆகிய மாநிலங்களில் பா.ஜ.க. வெற்றியைப் பெற்றுள்ள நிலையில், வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துள்ள பிரதமர் மோடி,

இந்திய மக்கள் நல்லாட்சி மற்றும் வளர்ச்சிக்கான அரசியலைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதை இந்த முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன என தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்,

பா.ஜ.க. மீது அசைக்க முடியாத ஆதரவை வழங்கிய மக்களுக்கு நன்றி. 4 மாநிலத்தில் பா.ஜ.க.வுக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி. நல்ல நிர்வாகம், வளர்ச்சி, அரசியல் ஆகியவற்றுக்கு மக்கள் உறுதுணையாக நிற்கின்றனர் என்பதற்கு தேர்தல் முடிவுகள் சாட்சி.

கடந்த சில ஆண்டுகளாக பா.ஜ.க.விற்கு வழங்கிய தொடர் ஆதரவிற்கு தெலுங்கானா மாநில மக்களுக்கும் நன்றி. தெலுங்கானா மாநில மக்களுடைய எங்களது பிணைப்பு பிரிக்க முடியாதது, அவர்களுடன் தொடர்ந்து பணியாற்றுவோம். மக்கள் நலனுக்காக தொடர்ந்து அயராது பாடுபடுவோம்.

இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.



மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு தினத்தை முன்னிட்டு, மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் நடைபெற்ற வட்டச்செயலாளர்கள் கூட்டத்தில், முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சான்றிதழ் சரிபார்ப்பு ஒத்திவைப்பு: ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு

சென்னை, டிச.04-

ஆசிரியர் தேர்வு வாரியத்தில் இன்று நடைபெறுவதாக இருந்த சான்றிதழ் சரிபார்ப்பு, மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்கூறப்பட்டுள்ளதாவது:

தொடக்க கல்வித் துறை மற்றும் அதை சார்ந்த பணிகளில் 2019-ம் ஆண்டு முதல் 2022-ம் ஆண்டு வரை ஏற்பட்ட வட்டார கல்வி அதிகாரிகளுக்கான பணியிடங்களை நிரப்புவதற்கு, நடத்தப்பட்ட தேர்வில் வெற்றி பெற்ற தகுதியுள்ள நபர்களுக்கு இன்று 4-ம் தேதி சான்றிதழ் சரிபார்ப்பு நடக்கும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

இந்த சான்றிதழ் சரிபார்ப்பு சென்னை நுங்கம்பாக்கம் பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் உள்ள ஆசிரியர் தேர்வு வாரியத்தில் நடக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மழை காரணமாக சான்றிதழ் சரிபார்ப்பு நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சான்றிதழ் சரிபார்ப்பு தேதி பின்னர் தெரிவிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மிக்ஜாம் புயல் எதிரொலி: வங்கிகள், ஐ.டி. நிறுவனங்களுக்கு இன்று விடுமுறை

சென்னை, டிச.04-

மிக்ஜாம் புயல் இன்று காலை கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து வங்கிகள், ஐடி, நிதி நிறுவனங்களுக்கு இன்று பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மிக்ஜாம் புயல் காரணமாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வருவாய் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது மிக்ஜாம் புயல் காரணமாக தனியார் நிறுவனங்களுக்கு இன்று விடுமுறை அளிப்பது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பார் என்று அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

மேலும், தனியார் நிறுவனங்கள் தங்களது பணியாளர்களின் நலன் கருதி முடிவெடுக்க வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், மிக்ஜாம் புயல் இன்று காலை கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து வங்கிகள், ஐடி, நிதி நிறுவனங்களுக்கு இன்று பொது விடுமுறை அறிவித்து தமிழக அரசு அரசிதழில் வெளியிட்டுள்ளது.



பாம்பன் துறைமுகத்தில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ள காட்சி.